## ஸத்திய தரிசனம்.

## மகாத்மா காந்தியின் ஜீவிய சரித்திரம்.

### 3-ம் பிரிவு-16-வது அத்தியாயம்.

மகாத்மா காந்தி இவ்வாரத்திய "யங் இந்தியா" பத்திரிகையில் எழுதிவரும் தமது ஜீவிய சரித்திரத்தின் தொடர்ச்சியின் வருமாறு:—

காங்கிரஸ் முடிந்துவிட்டது. ஆயினும் தென் ஆப்பிரிக்கா வேலையை ஒட்டி வர்த்தக சங்க மெம்பர்களையும் இன்னும் பலரையும் காண வேண்டியிருந்ததால் கல்கத்தாவிலேயே நான் ஒரு மாதகாலம் தங்கினேன். ஒரு ஹோட்டலில் தங்குவதற்குப் பதிலாக இந்தியா கிளப்பில் ஒரு அறை பெறுமாறு நண்பர்கள் மூலமாக ஏற்பாடு செய்துகொண்டேன். அந்தக் கிளப்பு மெம்பர்களுக்குள் சில பிரபல இந்தியர்களிருந்தனர். அவர்களுடன் பழகித் தென் ஆப்பிரிக்கா வேலையில் அவர்களுக்கு ஊக்கமுண்டுபண்ணுவதை நான் ஆவலோடு எதிர் பார்த்தேன். பிலியர்டு ஆடுவதற்காக கோகலே அடிக்கடி அந்த கிளப்பிற்குச்சென்றார். நான் கல்கத்தாவில் கொஞ்சகாலம் தங்கியிருக்கப்போவதாக அவருக்குத் தெரிந்ததும் அவர் என்னைத் தம்முடைய வீட்டிற்கு அழைத்தார். நான் அந்த வந்தனத்துடன் ஏற்றுக்கொண்டேன். ஆனால் நானாகவே அங்குபோவது உசிதமல்லவென்று கருதினேன். அவர் இரண்டொருநாள் காத்திருந்து விட்டு நேரில் வந்து அழைத்துச் சென்றார். நான் ஒன்றிலும் அதிகமாகக் கலந்துகொள்ளாமல் சற்று ஒதுங்கியிருந்ததை அவர் பார்த்துவிட்டு, "காந்தி! நீங்கள் இந்த தேசத்தில் தங்க வேண்டியிருக்கிறது. ஆகையால் இம்மாதிரி ஒதுங்கி நிற்பது பிரயோஜனப்படாது. எவ்வளவுதூரம் சாத்தியமோ அத்தனை பெயர்களுடன் தாங்கள் பழகவேண்டும். தாங்கள் காங்கிரஸ் வேலை செய்யவேண்டுமென்று நான் விரும்புகிறேன்" என்று கூறினார்.

நான் கோகலேயுடன் தங்கியிருந்ததைப்பற்றிக் கூறுமுன் இந்தியா கிளப்பில் நடந்த ஒரு சம்பவத்தைத் தெரிவிக்கிறேன்.

இச்சமயத்தில் லார்டு கர்ஸன் ஒரு தர்பார் நடத்தினார். அந்த தர்பாருக்கு அழைக்கப் பட்டிருந்த சில ராஜாக்களும் மகாராஜாக்களும் கிளப்பில் மெம்பர்களா யிருந்தனர். அவர்கள் கிளப்பிலிருந்தபோது எப்போதும் அழகான வங்காள வேஷ்டிகளையும் அங்கவஸ்திரங்களையுமே தரித்துக் கொண்டிருந்தனர். ஆனால் தர்பார் தினத்தன்று, கிளப்பு வெய்ட்டர்களைப் போல் அவர்கள் கால் சட்டைகளையும் பளபளப்பான பூட்ஸ்களையும் போட்டுக்கொண்டனர். நான் வருத்தமடைந்து அவர்களுள் ஒருவரை இந்த மாறுதலுக்குக் காரணமென்ன வென்று கேட்டேன்.

"எங்களுடைய துரதிஷ்ட வசமான நிலைமை எங்களுக்குத்தான் தெரியும். எங்களுடைய பட்டங்களையும் சொத்துக்களையும் காப்பாற்றிக்கொள்ள நாங்கள் எவ்வளவு அவமதிப்பைப் பொறுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறதென்று எங்களுக்குத்தான் தெரியும்" என்று அவர் பதில் கூறினார்.

"அதிருக்கட்டும். வேலைக்காரர்களைப்போல் இந்த உடைகளும் பூட்ஸ்களும் எதற்காக?" என்று நான் கேட்டேன்.

"வேலைக்காரர்களுக்கும் எங்களுக்கும் ஏதாவது வித்தியாசமிருக்கிறதா என்ன? அவர்கள் எங்களுக்கு வேலைக்காரர்கள். நாங்கள் லார்டு கர்ஸனின் வேலைக்காரர்கள். நான் இந்த தர்பாருக்குப் போகாமலிருந்து விட்டால் பிறகு இதற்காகக் கஷ்டங்களையனுபவிக்கவேண்டும். நான் வழக்கமான உடையுடன் சென்றால் அது ஒரு பெரிய குற்றமாகிவிடும். அங்கு நான் லார்டு கர்ஸனுடன் பேச அவகாசமேற்படுமென்று கருதுகிறீர்களோ? கொஞ்சங்கூட இல்லை."

இவ்வளவு வியக்கமாக உண்மையைக் கூறிய அந்நண்பருக்காக என் மனது உருகியது. இது எனக்கு இன்னொரு தர்பாரை ஞாபகப்படுத்துகிறது.

லார்டு ஹார்டிஞ்சு ஹிந்து ஸர்வ கலாசாலைக்கு அஸ்திவாரக்கல் நாட்டிய போது ஒரு தர்பார் நடத்தப்பட்டது. ராஜாக்களும் மகாராஜாக்களும் அதற்கு அழைக்கப்பட்டு வந்திருந்தனர். பண்டித மாளவியாஜீ என்னையும் பிரத்தியேகமாக அழைத்திருந்தார். நானும் சென்றிருந்தேன்.

மகாராஜாக்கள் ஸ்திரீகளைப்போல் பட்டுக்கால் சட்டை, கைச் சட்டைகளையும், முத்துமாலைகளையும் கையில் காப்பு சங்கிலிகளையும். தலைப்பாகையில் வைரங்களையும்போட்டு அலங்கரித்துக்கொண்டு தங்கப்பிடியுடன் கூடிய கத்திகளைப் பக்கத்தில் தொங்கவிட்டுக் கொண்டும் வந்தனர்.

இவையெல்லாம் அவர்களுடைய ராஜாங்க அந்தஸ்துகளைக் குறிப்பிடக் கூடியவையல்லவென்றும் அவர்களுடைய அடிமைத் தனத்தின் சின்னமாக விருந்தன வென்றும் கண்டுபிடித்தேன். அவர்கள் யோக்கியதையற்ற இச்சின்னங்களைத் தாங்களே இஷ்டப்பூர்வமாக அணிந்து கொண்டிருந்தனரென்று கருதினேன். ஆனால் இம்மாதிரி சந்தர்ப்பங்களில் அவர்கள் இந்த ஆபரணங்களைக் கட்டாயமாக அணிந்துகொள்ள வேண்டுமென்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர்களில் சிலருக்கு இந்த நகைகளைப் போட்டுக்கொள்ள விருப்பமே இல்லையென்றும், இம்மாதிரி தர்பார்களைத் தவிர மற்ற சமயங்களில் அவர்கள் இவற்றை அணிவதே இல்லை யென்றும் தெரிந்து கொண்டேன்.

நான் அறிந்துகொண்ட விஷயங்கள் எவ்வளவுதூரம் சரியானவை என்று எனக்குத் தெரியாது. மற்ற சமயங்களில் அவர்கள் நகைகளைப் போட்டுக்கொண்டாலும் இல்லாவிட்டாலும் ராஜப்பிரதிநிதிகள் நடத்தும் தர்பார்களுக்கு ஸ்திரீகளைப்போல் அவற்றைப் போட்டுக்கொண்டுதான் செல்லவேண்டுமென்றிருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். பணம், அதிகாரம், மதிப்பு முதலியவை எவ்வளவு பாவங்களையும் தவறுகளையும் சமைக்கின்றன!

---

மகாத்மாகாந்தி "நவஜீவன்" பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதிவரும் தமது ஜீவியசரிதையில் 3-வது அதிகாரம், 17-வது அத்தியாயமாவது:—

நான் கோகலேயுடன் தங்க ஆரம்பித்த நாள்முதலே அவர் எனக்கொரு குறைவுமில்லாமல் கவனித்து வந்தார். என்னைத் தம்முடைய இளைய சகோதரர்போல் பாவித்து வந்தார். எனக்கு வேண்டுவன என்னவென்பதை அவர் அப்போதைக்கப்போது விசாரித்து, அவைகள் எனக்குக் கிடைக்கும்படி செய்துவந்தார். நல்லவேளையாக என்னுடைய தேவைகள் மிகவும் குறைவு. தவிரவும் தன் கையே தனக்குதவி யென்ற தர்மத்தை நான் கைக்கொண்டிருந்ததால் பிறருடைய உதவியை நான் அதிகமாகப் பிரதீக்ஷிக்கவேண்டிய நிலைமையிலிருக்கவில்லை, என்னுடைய காரியங்களை நானே கவனித்துக் கொள்ளுவதையும் எனது சரீரத்தை நான் சுத்தமாக வைத்துக் கொள்ளுவதையும் என்னுடைய விடாமுயற்சியையும் கிலிப்தமான வழக்கங்களையும் அவர் பாராட்டி அடிக்கடி என்னைப் புகழ்ந்ததுண்டு.

அவர் என்னிடத்தில் எதையும் ஒளித்து வைத்துக் கொள்ளுவதில்லை. அவரைப் பேட்டி காணவரும் எல்லோரிடமும் என்னை அவர் அறிமுகம் செய்து வைத்துவந்தார். அவ்விதம் நான் அறிமுகம் செய்விக்கப்பட்டவர்களில் ஆசாரிய ராய் ஒருவர். அவர் பக்கத்தில் வசித்துக் கொண்டிருந்தார். அடிக்கடி அவர் கோகலேயைப் பார்க்க வருவார்.

அவரை எனக்கு அறிமுகம் செய்விக்கையில் "இவர் ஆசார்ய ராய். இவருக்கு மாதம் 800 ரூபாய் சம்பளம் கிடைத்தபோதிலும் தமது காலக்ஷேபத்திற்கு 40 ரூபாயை மட்டில் எடுத்துக்கொண்டு பாக்கிப் பணத்தைப் பொதுக்காரியங்களுக்காகச் செலவு செய்துவருகிறார். இவர் கலியாணம் செய்து கொள்ளவில்லை. இனி கல்யாணம் செய்துகொள்ளும் உத்தேசமும் இவருக்கு இல்லை" யென்று சொன்னார். அப்பொழுது ஆசார்ய ராய் இருந்ததற்கும் இப்பொழுது அவர் இருப்பதற்கும் எவ்வித வித்தியாசமுமில்லை. அப்பொழுதும் அவர் சாமான்யமாகவே உடுத்திக்கொள்ளுவார். இப்பொழுது கதரைக் கட்டிக்கொள்ளுகிறார்; அப்பொழுது சுதேசித் துணிகளை உடுத்திக்கொண்டிருந்தார். இது தான் வித்தியாசம். கோகலேயும் ராயும் எப்பொழுதும் பொது விஷயங்களைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பது வழக்கமாதலால் அதிகமாக அவர்களுடைய சம்பாஷணைகளைக் கேட்கக் கொடுத்து வைக்கவில்லையே என்று நான் வருத்தப்பட்டதுண்டு. சில சமயங்களில் அவர்கள் வேறு தலைவர்களைக் கண்டித்தும் பேசுவார்கள். இது மனதிற்கு வருத்தமாகத்தானிருந்தது. அவர்களுடைய சம்பாஷணைகளைக் கேட்டு முன் சிலரிடத்தில் எனக்கிருந்த மதிப்பு பிறகு குறைந்துவிட்டது.

கோகலே வேலை செய்யும்போது பார்ப்பது ஆனந்தம். ஒரு நிமிஷத்தைக்கூட அவர் வியர்த்தம் செய்யமாட்டார். யாரிடமும் அவர் பொது விஷயங்களைப்பற்றியே பேசிக்கொண்டிருப்பார். அனாவசியமான வார்த்தை ஒன்றுகூட அவர் வாயிலிருந்து வராது. இந்தியா தாரித்திரிய தசையில் ஆழ்ந்து கிடப்பதையும், அன்னியருடைய ஆதிக்கத்திற்குட்பட்டிருப்பதையும் பற்றி அவர் மிகவும் கவலைப்படுவார். பலபேர் பல விஷயங்களில் அவருடைய கவனத்தைத் திருப்ப முயலுவார்கள். "அதை நீங்களே செய்யுங்கள்; என்னுடைய வேலையை நான் பார்க்கிறேன். என்னுடைய தேசம் சுதந்திரமடைய வேண்டுமென்று நான் விரும்புகிறேன். அது கிடைத்தபிறகு மற்றவிஷயங்களைப்பற்றி நாம் யோசித்துக்கொள்ளலாம். இப்பொழுது என்னுடைய காலம் முழுவதையும் கவருவதற்கு அந்த ஒரு விஷயமே போதுமானது" என்று அவர் எல்லோருக்குமே பதில் சொல்லுவார்.

ரானடேயிடத்தில் அவருக்கு அதிக மதிப்புண்டு. அதை எப்பொழுதும் அவர் காட்டிக்கொள்ளுவார். எந்த விஷயத்திலும் ரானடேயின் முடிவே அவருக்கு வேதவாக்கு. அவருடைய அபிப்பிராயத்தையே அவர் அடிக்கடி எடுத்துக்காட்டுவார். நான் கோகலேயுடன் தங்கியிருந்த காலத்தில் ரானடேயின் வருஷாப்திகம் வந்தது. அதை கோகலே விசேஷமாகக் கொண்டாடினார். அப்பொழுது ஆசிரியர் காத்தவேட்டும், ஒரு சப் ஜட்ஜும் வந்திருந்தனர். அந்தக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ளும்படி கோகலே அவர்களை அழைத்திருந்தார். அவர் ரானடே, தெலாங், மாண்ட்லிக் இவர்களை ஒருவருடனொருவர் ஒப்பிட்டுப் பேசினார். தெலாங்கின் அழகிய நடையையும், மாண்ட்லிக் என்பவருக்கு அவருடைய கட்சிக்காரர்களிடத்திலுள்ள கவலையையும் அவர் எடுத்துச் சொன்னார். ஒரு தடவை ரயில் வண்டி தப்பிப் போய்விட்டதும் தமது கட்சிக்காரரின் நன்மையை உத்தேசித்து ஒரு ஸ்பெஷல் ரயில் வண்டியை ஏற்பாடு செய்துகொண்டு போனதாக அவர் சொன்னார். ஆனால் எல்லாரையும்விட ரானடே மேலானவரென்றும் சரித்திர ஞானமும், அர்த்த சாஸ்திர நிபுணத்துவமும், ஆசாரச் சீர்திருத்த ஆர்வமும் அவரிடம் குடிகொண்டிருந்தனவென்றும் அவர் சொன்னார். அவர் ஒரு ஜட்ஜியாகவிருந்தும் பயமில்லாமல் காங்கிரஸுக்கு வந்து கொண்டிருந்தாரென்றும், அவருடைய புத்திசாலித்தனத்தில் எல்லோருக்கும் நம்பிக்கையிருந்ததால் அவர்கள் அவர் சொற்படி நடந்து வந்தார்களென்றும் அவர் சொன்னார். தமது குருவின் குண விசேஷங்களைச் சிலாகித்துப் பேசுகையில் அவர் அடைந்த சந்தோஷத்திற் களவில்லை. அந்தக் காலத்தில் கோகலே ஒரு குதிரை வண்டி வைத்துக் கொண்டிருந்தார். ஏன் அவர் குதிரை வண்டியை வைத்துக்கொண்டிருந்தாரென்பது எனக்குத் தெரியாது. ஆகையால் நான் "ஏன் டிராம்வண்டியில் போகக்கூடாது? டிராம்வண்டியில் செல்லுவது தலைவர்களுக்கு கௌரவக் குறைவை உண்டுபண்ணுமா?" வென்று கேட்டேன்.

சிறிது வருத்தத்துடன் "நீங்களும் உண்மையை அறிந்துகொள்ள முடியவில்லையா? சட்டசபையில் எனக்குக் கிடைக்கும் படியை என்னுடைய சொந்த சௌகரியத்திற்காக நான் உபயோகித்துக் கொள்ளுவதில்லை. டிராம் வண்டியில் செல்லுவதற்கு உங்களுக்கிருக்கும் சுதந்திரத்தைக் கண்டு நான் பொறாமைப்படுகிறேன். ஆனால் நானும் அவ்விதம் செய்வதற்கில்லை. உங்களுக்கும் என்னைப்போல் பெயர் கிளம்பியதும் டிராம்வண்டியில் பிரயாணம் செய்வது உங்களுக்குக் கஷ்டமாகத்தானிருக்கும். தலைவர்கள் செய்யும் காரியங்கள் சொந்த சௌகரியத்தை உத்தேசித்துத் தானென்பதில்லை. உங்களுடைய அடக்கத்தை நான் பாராட்டுகிறேன். நானும் கூடியவரையில் அடக்கமாகத்தானிருக்கிறேன். இருந்தாலும் என் போன்றவர்களுக்கு சொந்தச் செலவு அவசியந்தான்" என்று சொன்னார்.

இவ்விதம் என்னுடைய ஒரு புகாருக்கு அவர் திருப்திகரமாகப்பதில் சொல்லிவிட்டார். மற்றொரு புகாருக்கு அவரால் திருப்திகரமாகப்பதில் சொல்ல முடியவில்லை.

"நீங்கள் உலாவக்கூடச் செல்லுவதில்லையா? உங்களுக்கு அடிக்கடி வியாதி ஏற்படுவதில் அதிசயமொன்றுமில்லை. பொதுவேலைகள் வியாயாமத்திற்குச் சிறிது நேரம்கூடவா அவகாசம் கொடுக்கவில்லை?" யென்று நான் கேட்டேன்.

"எப்பொழுது எனக்கு ஒழிந்திருக்கிறது?" என்று அவர் பதில் கேட்டார்.

அவரிடத்தில் எனக்கு அதிக மதிப்பு இருந்ததால் தடுத்துச் சொல்ல முடியவில்லை. அவருடைய பதில் திருப்திகரமாக இல்லாமலிருந்த போதிலும் நான் சும்மாவிருந்துவிட்டேன். எவ்வளவு வேலை ஒருவருக்கு இருந்தாலும் சிறிது நேரமேனும் வியாயாமத்திற்காக செலவிட வேண்டும் என்றே நான் அபிப்பிராயப்படுகிறேன். சிறிது வியாயாமம் செய்தால் வேலையைச் சுறுசுறுப்பாகச் செய்வது சாத்தியப்படும்.

---

## பேரையூரில் க்ஷத்திரியா வித்தியாசாலை ஸ்தாபகம்.

18—3—27-ல் க்ஷத்திரிய பாலிய நாடார் கல்வியபிவிர்த்தி சங்கத்தின் பேராதரவைக்கொண்டு க்ஷத்திரிய வித்தியாசாலை ஸ்தாபகம் செய்யப்பெற்றது. அவ்வமயம் இவ்வூர் பிரபலஸ்தர்களும் உபாத்திமார்களும் விஜயம்செய்திருந்தார்கள். எல்லோரும் தெய்வ ஆராதனை செய்து வித்தியாசாலையை ஆரம்பம்செய்தவுடன் ஒவ்வொருவரும் நல்வாசி கூறினார்கள். வித்தியாசாலையில் சேர்க்கப்பட்ட மாணவர்கள் ஐந்தாவது வகுப்புவரை சேர்க்கப்பெற வாய்க்குள்ளவர்களாயிருந்தபடியால் 1-வது வகுப்பிலிருந்து ஐந்து வகுப்பு வரை பிரிக்கப்பெற்றிருக்கிறது. ஆனால் இவ் வித்தியாசாலை 7-வது வகுப்புவரை ஏற்படுத்தியிருக்கிறது. இதன் கல்வித் திட்டம் தேசிய முறையில் நடத்திவர உத்தேசம். இதில் இதர வகுப்பு பிள்ளைகளும் வாசித்துவர அனுமதி கொடுத்திருக்கிறது. தற்காலிகமாய் குறைந்த சம்பளம் மாணவர்களுக்கு வகுப்புவாரியாய் ஏற்படுத்தியிருக்கிறதென்று ஸ்ரீமான் எம். வி. முனிஸாமி நாடார் எழுதுகிறார்.

---

## கலியுக விநோதம்.

கடையநல்லூர்க்கடுத்த மேட்டூரில் 1—5—27 மாலை 4½ மணி சுமாருக்கு மேகங்களெல்லாம் ஒன்று கூடி இருண்டு இடி மின்னல் நிகழ்ந்துகொண்டு வகுவு பிரகாசமாக பச்சை, நீலம், சிவப்பு, வெள்ளை முதலிய பல வர்ணக் கற்களாக கல் மாரி பெய்ததாம். கற்கள் ஒவ்வொன்றும் அரைவு பருமனாக இருந்தனவாம். ஜனங்களெல்லாம் இவ்வற்புதத்தைக்கண்டு பிரமித்துப் பீதியடைந்தனர்களாம். மின்னல் ஒளியால் நின்றவர்களுக்கு மயக்கமாயிருந்ததாம்.

பெண்ணை ஆணாகவும், ஆணைப்பெண்ணாகவும் செயற்கையில மாற்றும் இக்கலிகால யுகத்தில் என்னென்ன புதுமைகள் நடக்குமோ!வென மா. சு. குருசாமி நாடார் எழுதுகிறார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# இலங்கை நாடார் நன்மக்கள் கவனத்திற்கு.

## எமது அன்பின் வேண்டுகோள்.

இலங்கைவாழ் இரவிகுலரத்தினங்காள்! தங்கள் திருச் சமூகத்திற்குச் சிறியேனாகிய யான் வேண்டியச் சிறிய வேண்டுகோளைக் கருத்திற்கொள்ளக் கெஞ்சுகிறேன்.

ஏனெனில் யாம் வரையுமிவ் விடயஞ் சிறிதெனினும் விஷயம் பெரிதானது என்பதை யோர்ந்து கொள்ள முன்னறிக்கை யுடன் தங்கள் மணி போன்ற கவனத்திற் கொண்டு கருத்துற மீண்டும் வேண்டி விஷயந்தொடர்வாம்.

இவ்விலங்கா கற்பகத்தின் கண் நம் சமூக முன்னேற்றத்தைக் கொண்டு நம்மவர்க்கென்று ஓர் பொதுச் சங்கம் வேண்டுமென்றுபல பெரிய மனிதருது உள்ளத்தில் சிரத்தை சவழ்ந்தமை வளர்ச்சிப் படுத்தும் தூண்டு கோலாய் நம் மித்திரன் அதிபர் கனம் முத்து நாடார் அவர்கள் முன்னர் இவண் விஜயஞ் செய்யுங்கால் கொடுத்த உற்சாகத்தால் நமது ஐக்ய சங்கம் தற்போது சரியான கூட்டங்கள் கூடாமலும், பலரதும் மனம் வேறுபாடாய்த் தியங்கிப் ப்பதை யெண்ணி பொதுக் கூட்டமொன்று கூட்டி யதன் விபரத்தை யறிந்து, ஈண்டு புதிர் வாகிகளை யிணைத்தோ, அல்லதவர்களையே ஒழுங்கு படுத்தியோ, செம்மை செய்ய வேண்டுமென்ற எண்ணம் பலர் பாலெழும்பி வாதிடுஞ் சமயம், மேற்படி சங்கத்திற்கு முழு அன்புள்ளவர்கள் அதிபர் அவர்களின் இரண்டாம் முறை விஜயமும் வழியிறக்கசேர்ந்தது பெரும் நன்மையான காரியம். கடந்த 24—3—27-ல் கனம் அதிபர் அவர்களைக் குதூகலமாய் வரவேற்றுபசரித்த "இலங்கை நாடார்" பொதுக் கூட்டத்தின் கண் ஆவரைக் குளம் ஸ்ரீமான் ஞா. பா வேதநாயக நாடார் அவர்கள் விரும்பிக் கொணர்ந்த பிரேரணையாகிய 'இலங்கைத் தேசம் வாழும் இந்திய க்ஷத்திரியநாடார்களின் எதிர்காலச் சேமங் கருதி உழைக்க ஏற்பட்டிருக்கிறஸ்தாபனங்களைப்புதுப்பிக்கவும், இன்னும்பல்வேறு ஸ்தாபனங்களை ஸ்தாபிக்கவும், தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைத் தீர்மான ரூபமாகச் செய்து கிரியாம்சையி லுழைக்கச் சாதகமாய் ஓர் மஹாநாட்டை விரைவில் கூட்டி வைக்க இம் மஹாநாடு தீர்மானிக்கிறது" என்ற தீர்மானத்தை மிக மகிழ்ந்து ஏற்றுக் கொண்ட இலங்கை நாடார்கள் அது விஷயத்தை அன்றையக் குதூகலத்தில் ஏற்றுக் கொண்டதாயல்லாமல் உண்மையில் அவசியமாய் ஏற்றுக் கொண்டதாய் எண்ணி விரைந்து மஹாநாட்டைக் கூட்டிவைக்க வேண்டிய சிரத்தையை யெடுத்துக் கொள்ள ஒவ்வொருவரையும் மிகப் பணிவுடன் வேண்டுகிறோம்.

மீண்டும், தற்போது கூட்டும் மஹாநாடு, இலங்கை க்ஷத்திரிய நாடார் ஐக்ய சங்கத்தின் கொமச்சலிலை த்துகளை எடுத்துச் செம்மைப் படுத்தும் நோக்கமுடையதாகவே இருத்தல் தற்போது மிக மிக அவசியம். ஆகவே அதற்குரிய கால இட வசதியை ஆய்ந்து கூட்டத்தைக் கூட்ட ஏற்ற ஏற்பாடுகளைச் செய்ய முன்னக் கூடியே கமிட்டி ஒன்றை ஏற்படுத்தல் அவசியமாயிருப்பதாலும், அவசியம் கமிட்டியைத் தீர்மானிக்கும் நோக்கமாய் ஆலோசனைப் பொதுக் கூட்டம் ஒன்று ஏற்படுத்த உடன் முயற்சி செய்யுமாறு பெரியவர்களையும், முக்கியமாய் வாலிபர்களையும் தூண்டுகிறேன்.

# நீதி நிதி.

பூகிலத்தில் நமக்கு வேண்டியது முத்தும், கரும்பின் ரஸமுமே தவிர முத்துச் சிப்பியும் சக்கையுமல்ல.

* *

நாம் எந்த நோக்கத்தோடு ஒன்றைக் கவனிக்கிறோமோ அதை அனுசரித்தே அதிலிருந்து விஷயங்களும் வெளியாகிறது.

* *

ஒரு துஷ்ட மோனை அடைந்த மொட்டியைக்காட்டிலும்; ஒரு நல்ல ஏழையை அடைந்த பாரி பாக்கியமுள்ளவளென்பது மிகையாகாது.

* *

ஒரு குடும்பத்திற்கு நல்ல பெயரை வாங்கி ஓங்கச் செய்வதும் ஸ்திரீகளே; அதை நீங்கச்செய்வதும் பெண்களே.

* *

உயர்ந்த ஆடை ஒழுக்கம்; மேலான அழகு நற்குணம்; சிறந்த ஆபரணம் அன்பு; பிரகாசமான கண் சற்பே.

* *

கோடி செல்வத்திலும் திருப்தி மேலான சுக செல்வம்.

* *

அருந்ததி போன்ற மனைவியும், ராமர் போன்ற மைந்தர்களுமிருப்பதைக் காட்டிலும், மனச் சஞ்சலம் பகையாகி சந்தோஷ சமாதானம் கேண்மையாகி இருக்கும் தனி மனிதன் யோகவான்.

* *

கழுத்தில் வாளால் வெட்டப்பட்டு பிழைத்துக் கொள்கிற காலமுமுண்டு. முள் தைத்து மரணமடைகிற காலமுமுண்டு.

* *

வைராக்கியத்துக்கும், பிடிவாதத்துக்குமுள்ள வித்தியாசம் குதிரைக்கும், கழுதைக்குமுள்ள வித்தியாசம் போன்றது.

* *

குப்பையில் மறைந்திருந்தாலும் வைரக்கல் வைரக்கல்லே; கிரீடத்திலிருந்தாலும் போலிக் கல் போலிக் கல்லே.

* *

கையெழுத்திட்ட கடிதத்தில் கனப் படுத்தியும், அநாமக் கடிதத்தில் அவலக்ஷணமான வார்த்தைகளால் அவமானப்படுத்தியுமெழுதுவோர்கள் ஆண்களில் பெண்கள்—சுய ஆண்மையற்ற பேடிகள்.

* *

மீசையினுலொருவர் ஆண்மையுள்ளவராகி விட முடியாது. நீதிப்பிரசங்கம் செய்வதினாலும், எழுதுவதினாலுமொருவர் நீதிமானாகிவிட முடியாது. ஆடம்பரத்தினாலொருவர் பணக்காரராகிவிட முடியாது. கீர்த்தனைகள் எழுதுவதினாலொருவர் புலவராகிவிட முடியாது.

* *

ஆசையினாலொருவர் காரியத்தை முடித்துக் கொள்வதென்பது இலவங் கனி போன்றது.

* *

புகழை விரும்புவோரைக் காட்டிலும் அதை இச்சியாதவர்களுக்கே கீர்த்தி மூன்றாம் பிறைத்திங்கள் போலாகிறது.

* *

தன் மானத்தையும், நியாயத்தையும் மொட்டை யடித்தவர்களே பிறருக்கு அநீதியாக மொட்டை மனு எழுதுவார்கள்.

* *

பக்ஷி மிருகங்களில் மானிடர்க்கு மேலானவைகளுமிருக்கின்றன.

அ. கு. அண்ணாமலை நாடார்.

---

எவ்விஷயத்திற்கும் பின்னடையா இலங்கை வாலிப நாடார்கள் இஃதைத் தங்கள் அவசிய காரியமென ஊன்றியெண்ணி எழ மீண்டும் வேண்டுகிறேன் என வடக்கன்குளம் ஸ்ரீமான் சி. கூ. சவரிமுத்து நாடார் எழுதுகிறார்.

# சர்வதேச சம்பவங்கள்.

சீனாவின் நிலைமை சென்ற ஒரு வருஷத்திற் கதிகமாக கவலைக்கிடமானதாகவே இருந்தபோதிலும் இன்னமும் எவ்விதமான ஓர் முடிவுக்கும் வரவில்லை. மேலும் சீனாவில் தேசியக் கிளர்ச்சிக்கு முக்கிய காரணஸ்தராயுள்ள காண்டனியர் அனுஷ்டிக்கும் கொள்கையும் நோக்கமும் இன்னதுதான் என்றும் எவரோடுதான் தமக்கு மனஸ்தாபம் எவரோடு சமாதானம் என்ற தெளிவான கட்டம் ஏற்பட்டிருப்பதாயும் தெரியவில்லை. ஹாங்காங்கில் உண்டான முதற்கிளர்ச்சியில் இங்கிலீஷ்காரர்கள் வெளியேற்றப்பட்டபின் பிரஞ்சு ஜப்பானிய ஸ்தாபனங்கள் சீனர்களால் மதிப்பாயும் சிநேகப்பான்மையுடனும் மதிக்கப்பட்டுவந்தனவென்றும் இதனால் அந்நியர்களை தங்கள் தேசத்திலிருந்து வெளியேற்றவேண்டும் என்ற கொள்கையல்லாத வேறு ஏதோ ஓர் அர்த்தம் இக்கிளர்ச்சிக்குக் கற்பிக்கப்படவேண்டியதாகிறதென்றும் இங்கிலீஷ் பத்திரிகைகளில் அபிப்பிராயம் கூறப்பட்டு வந்தது. பின்னால் கடந்த சம்பவங்களிலும் அமெரிக்கரும் ஆங்கிலேயருமே பொதுவாக அதிகக் கஷ்டத்துக் காளானார்களென்பது வெளிப்படையான விஷயம். ஆனால் சென்ற வாரத்தில் நாங்கின் என்னும் பட்டணத்தை காண்டன் துருப்புகள் துப்பாக்கிப் பிரயோகத்துடன் கைப்பற்றி உட்பிரவேசித்து பல உயிர்ச் சேதங்களுக்கும் பொருள் நஷ்டத்துக்குமிடமான அட்டூழியங்கள் செய்ததில் யாதொரு வித்தியாசம் பாராட்டாமல் எல்லாஜாதியாருமே கொலைக்கும் கொடுந்துன்பத்திற்கும் ஆளானார்களென்றும் சமீபத்தில் நின்றுகொண்டிருந்த அமெரிக்க இங்கிலீஷ் யுத்தக்கப்பற்படைகளால்தான் ஓரளவு ஜனங்கள் பாதுகாக்கப்படவேண்டியதாயிற்றென்றும் விரிவான செய்திகள் சில நாட்களாய் வந்துகொண்டிருக்கின்றன. இதில் முக்கிய விஷயம் என்னவென்றால் ஜப்பானிய உத்தியோகஸ்தர் உள்பட சில ஜப்பானியர்கள் காயப்பட்டும் சிலர் கொல்லப்பட்டும் போனார்கள். இதனை ஷாங்காய் நகர்சென்று அங்குள்ள ஜப்பானிய அதிகாரிகளிடம் தெரிவித்த ஜப்பானிய ஜெனரல் தமது தேசத்துக்கு என்றும் இவ்வித அவமதிப்பு ஏற்பட்டுவிட்டதென்ற அவமானம் பொறுமல் தற்கொலைசெய்ய எத்தனம் பண்ணியதாகவும் தடுக்கப்பட்டதாகவும் தெரிகிறது. இதன் சம்பந்தமாய் ஜெப்பானின் உதவியை எதிர்பார்த்த ஐரோப்பிய தேசங்கள் ஜப்பான் தங்களுடன் சேர்ந்து கூட்டுறவான நடபடி செய்யுமென்று எதிர்பார்த்தார்கள். ஜப்பானின் முக்கிய பத்திரிகையொன்று இங்கிலாந்து அமெரிக்காவுடன் சேர்ந்து நடபடி தொடர்ந்து கொள்ளவேண்டிய அவசியம் ஜப்பானுக்கு ஏற்பட்டிருக்கவில்லை என்று எழுதுகிறது. சீனர்களும் ஜப்பானிய கடற்படைத் தலைவரிடம் சென்று தாங்கள் செய்த தவறுதலுக்காக வருந்துவதாக அப்பாலஜி என்னும் மன்னிப்பு விண்ணப்பம் பண்ணிக்கொண்டார்கள். ஜப்பானிய அட்மிராலும் அதிகக் கண்டிப்பான எச்சரிக்கையுடன் மன்னிந்து விட்டதுடன் சீனர்களின் செயல்தமக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணிற்றென்றும் இனி இவ்விதம் ஏற்பட்டால் கண்டிப்பான நடபடி எடுத்துக்கொள்ளப்படுமென்றும் சொல்லியிருக்கிறார். இவ்வித நிலைமையில் ருஷியாவில் கூடிய மாகாண மஹாநாடொன்றில் சோவியத் மந்திரி ஒருவர் சீனாவின் நிலைமை இன்னும் விசாரித்துக்கொண்டு போனால் அது உலகம் முழுவதையுமே பாதிக்கும் பெரிய யுத்தமாகும் என்று கூறியிருக்கிறார். இங்கிலாந்திலோ சீன்விஷயமாய் திடமான கொள்கை ஒன்றும் ஏற்பட்டதாகவில்லை. கவர்ன்மெண்டாருக்கு யுத்தம் செய்வதாவது தோத்தின் பெருமையை நிலைநாட்ட வேண்டுமென்ற கருத்து இருப்பதாகவாவது அபிப்பிராயப்படக் கூடுமானாலும் எதிர் கக்ஷித் தலைவர்களான லாயிட்ஜியார்ஜ் மெக்டானல்ட் முதலியவர்களும் பெரும்பாலான ஜனங்களும் யுத்தத்திற்கு ...

# வங்காள தேசீய வழக்குகள்.

## ஏழைகளுக் களித்த பணம் கையாடப்பட்டதேன்?

காலஞ் சென்ற வங்காளச் சிங்கம் ஸி. ஆர். தாஸ் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட வங்காள கிராம புனருத்தாரண நிதிக்கு உதவி செய்தவர்களில் முதல்வராகிய ஸ்ரீமான் ஏ. என். முல்லிக் என்பார் ஸ்ரீமான் தாஸ் காலத்தில் ஏழைகளின் ரக்ஷிப்புக்காகத் தோற்றுவிக்கப்பட்ட ஷை நிதிக்குத்தான் 10000 ரூபாய் கொடுத்திருந்ததாகவும், அதை ஸ்ரீமான் ஸி. ஆர். தாஸ் அவர்கள் காலத்திற்குப்பின் எந்த நோக்கத்திற்களிக்கப்பட்டதோ அதற்கின்றி தேர்தல் செலவுக்காக சிலநபர்களால் சுய நலங் கொண்டு நிதி செலவிடப்பட்டிருக்கிறதென்றும், தான் இதை எவ்வளவு தூரமோ தடுத்தும் முடியவில்லையென்றும், ஆகையால் இந்நிதியைக் கிராமப் புனருத்தாரணத்துக்கன்றி வேறு வழியில் செலவிடப்படக் கூடாதென்று தடையுத்தரவுபிறப்பிக்க வேண்டுமென்றும், ஹைகோர்ட்டாரே நிர்வகித்து ஒரு ரிஸீவர் நியமித்துச் செலவிட வேண்டுமென்றும் கோரி மேற்படி நிதி டிரஸ்டிகள் பேரில் கல்கத்தா ஹைகோர்ட்டில் வழக்குத் தொடுத்திருக்கிறார். பிரதி வாதிகளுக்கு சமன் சார்தாரசெய்யப்பட்டிருக்கிறது.

மற்றும் ஸ்ரீமான்சென்குப்தா விடம் காங்கிரஸிற்காக ரூ 5000 கொடுத்ததாகவும், அத்தொகை காங்கிரஸ் கணக்கில் காணப்படவில்லையென்றும், இதனால் ஸ்ரீமான் சென்குப்தா மேற்கண்ட தொகையைத் தனது சொந்தத்திற்குக் கையாடிக் கொண்டதாகவே கருதுவதால் அதை வட்டியுடன் தனக்குத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்றும் கோரி தனியாக ஒரு மனுவும் ஷை கோர்ட்டில் ஸ்ரீமான் முல்லிக் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

## வாதிக்குப் பிரதிவாதி தாழ்ந்தவனல்ல.

இங்கிலாந்தில் எட்வர்டு வில்ஸன் என்பவன் செருப்பைத் திருடியதாகப் போலீஸ் கோர்ட்டில் இரண்டு பவுன் அபராதம் விதிக்கப்பட்டான். செருப்பைத் திருடும்போது வில்லியம் ஸாலமன் கத்தி கொண்டு குத்தியதால் தன்னைக் கொலை செய்ய முயர்சித்ததாக வில்ஸன் முறையிட்டுக்கொண்ட ஸாலமன் காவலில் வைக்கப்பட்டான்.

---

பிராயம் கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள். இந்த நிலைமையில் இங்கிலாந்தில் பொது எலெக்ஷன் நடைபெறக் கூடிய பிரசாரம் துவங்கிவிட்டது. யுத்தத்திற்குத் தயாராயிருக்கும் எந்த கவர்ன்மெண்டையும் ஜனங்கள் விரும்பமாட்டார்கள். ஆகையினால் இங்கிலாந்தின் எலெக்ஷனுக்குப் பின்னாகத்தான் சீனாவின் விஷயமாய் இங்கிலாந்தின் திடமான கொள்கை வெளிவர முடியும்.

சமாதான விர்த்திக்கென்றும் ஆயுதங்களைக் குறைக்கவும் கப்பல்கட்டுவதை நிறுத்தவும் ஜெனிவோவில் கான்பரன்ஸ் அழகாய் நடைபெற்றுக் கொண்டுதானிருக்கிறது. இந்தியாவின் விஷயமாய் ஜனங்கள் போதிய அளவு ஒத்துழையாததால் ராயல் கமிஷன் வருவது சீக்கிரமாயிராதென்றும் அது ஜனங்களைப் பொறுத்தேயிருக்கிறதென்றும் மறுபடியும் ஓர் முறை பர்க்கன்ஹெட் பிரபு சொல்லியிருக்கிறார்.

D. B. S.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

நாடார்குலமித்திரன்
பிரபவ ௵ சித்திரை ௴ ௬௨

## ஜஸ்டிஸ்கட்சியின் பூர்வ ஞானம்.

பிராமணரல்லாதார் மாபெரு மக்கள் முன்னேற்றத்தைக் கருதி ஆதியில் டாக்டர் நாயரும், ஸர். தியாகராயரும் ஜஸ்டிஸ் இயக்கத்தை உற்பவித்தார்களென்பது உலகமறிந்த விஷயம். அவ்வியக்கத்தின் முக்கிய நோக்கம், சமுதாயத்தில் சமத்துவமும், சரிசமமான உரிமையும் எல்லா வகுப்பினருக்கும் இருக்க வேண்டிய நீதி வளங்க வேண்டுமென்பதும், தாழ்ந்தவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்ற இலக்கியத்தையே எடுத்தெறிய வேண்டுமென்பதுமே இவைதான் அவ்வியக்கத்தின் அடிப்படையான தத்வங்களாகும். நாயரும், ராயரும் அவ்வடிப்படையான கொள்கைகளுக்குச் சிறிதும் மாறுபாடின்றி வேலை செய்தும் வந்தார்கள். கஷ்டப்படும் மக்களும் ஒருவாறு கண்விழிப்படைந்தார்கள். மகாத்மா காந்தி நிர்மாணத் திட்டங்களும், ஜஸ்டிஸ் கொள்கைக்குப் பெரும்பாலும் ஒத்தேயிருந்தன. ஆனது பற்றி பிராமணரல்லாத பெரு மக்கள் பெரும்பாலோர் ஜஸ்டிஸ் இயக்கத்தைத் தழுவினர்கள். நாயரும், ராயரும் காலஞ் சென்றவுடனே அவ்வழி வந்த தலைவர்கள் பால் அரசியல் பழுவழுத்தியவுடன் சிறிது மாறுதலுண்டாயது. எந்த மேலான நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்டதோ, அதனைப்பற்றி முக்கிய கவனம் செலுத்தாமல்த் தவறிப் போய்விட்டது; இதனாலே தேச மக்கள் போஷதரவும் போய்விட்டதென்ற உண்மையை மறைக்க முடியாது.

ஒரு இயக்கம் வலுப்பட வேண்டுமானால் அதற்கு வேண்டிய சக்தியை சாதாரண ஜனங்களிடமிருந்தே பெறல் வேண்டும்; பெற்ற பின்பும் அத்தொடர்பு விட்டுப்போகாமல் தொட்டுக்கொண்டே நிற்கவும் வேண்டும்; அத்தொடர்பில்லா எவ்வியக்கமும் ஆட்டங்கொடுத்துத்தான் போகுமென்பதும் உண்மையே. இத்தத்துவத்தை ஜஸ்டிஸ் கட்சி சிறிது காலம் மறந்து மீண்டும் உணர்ந்திருப்பதாக அவர்கள் வார்த்தைகளிலிருந்து வெளிவந்து விட்டது.

சென்னை சௌந்திரியமஹாலில் கூடிய பிராமணரல்லாதார் மாபெருங் கழகத்தில் நிகழ்த்தப்பெற்ற முக்கியத் தலைவர்கள் சொற்பொழிவுகளில் ஜஸ்டிஸ் கட்சியின் பூர்வ ஞானம் வெளியாயிருக்கிறது பற்றி மிகவும் மகிழ்வடைகின்றோம். பிராமணரல்லாத பெருங்கிழவர் ஸ்ரீமான் பச்சையப்பமுதலியார் கல்லூரியில் ஆதித்திராவிட மக்களை விலக்கி வைத்திருக்கும் கொடுமையின் கூற்றை எதிர்த்துக் கோர்ட்டின் மூலம் தீர்ப்பு வாங்குவதற்கு பனகால் அரசர் பண வுதவி செய்ய முன் வந்துள்ளாரென்ற சமாச்சாரங்கேட்டு யார்தான் சந்தோஷமடையாதிருக்க முடியும்!

ஸர். ஏ. பி. பாத்ரோ, நாம் இயக்கத்தின் அடிப்படையான நோக்கத்தைக் கருதாமல் ராஜீபத்துறையில் அதிகக் கவனம் செலுத்தி விட்டோமென்றும், அது வருந்தத்தக்கதென்றும், சமுதாயமுன்னேற்றமே ராஜீய முன்னேற்றத்திற்கு வழியாகுமென்றும், தாழ்த்தப்பட்டவரென்றும், தீண்டத்தகாதவரென்றும், கூறப்படும் கொடிய வழக்கங்களை உடைத்தெறியவேண்டுமென்றும், பொது ஸ்தாபனங்களில் அவ்வகுப்பினரைச்சேர்த்துக்கொள்ள மறுப்பது மிகவும் வருந்தத்தக்கதென்றும், தென்னிந்தியாவின் சமுதாய இயல்பு மற்றப் பாகங்களை விடமிகுதியும் மாறுபட்டிருக்கிறதென்றும், மக்களுக்குள் உயர்வு, தாழ்வும் ஏகமேபாக உரிமைக் குணமும், உடைத்தெறியப்பட்டு சமத்வமும், சகோதரத்வமும் தழைத்தோங்கச் செய்யப்பட்டாலன்றி வகுப்பு சம்பந்தமான நீதி வளங்கப்பட முடியாது என்றும், 1929 ல் வரும் ராயல் கமிஷன் முன்பு கிராம வாசிகளின் நிலைமையிலும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் வாழ்க்கையிலும் அனுதாபங்காட்டி உதவிசெய்யக் கூடுமென்பதை விளக்க வேண்டுமென்றும், இன்னும் பல தெளிவான விஷயங்களையும் வெளியிட்டிருக்கிறார். இதுவே நாயர், ராயர் கொள்கை; இதுவே மகாத்மா காந்தி கொள்கையும், தேசபந்து தாஸ் கொள்கையுமென்று கூடச் சொல்லலாம். ஆகையால் ஜஸ்டிஸ் கட்சியின் பூர்வ ஞானம் பிரசவ ஞானமாய் மாறிப்போகாமல் அவர்கள் வேலையைத் துரிதமாய்ச் செய்வார்களென்று நம்புகிறோம்.

தீண்டாமை என்ற கொடுமை அறவே ஒழிய வேண்டும்; சில ஆலயங்களில் சில வகுப்பினர் செல்லக் கூடாதென்ற வழக்கம் தொலைய வேண்டும். இவ்விரண்டுந்தான் தென்னிந்தியாவில் முக்கியமான குறைகள். இவை தீர்ந்தால் மற்றவைகளை மாசறக்களைந்து விடலாம். இவை சட்ட மூலமாகவோ, சமுதாயக் கட்டுறவாலோ, எது சாத்தியமோ அதன் வழி நிவர்த்தி செய்ய ஜஸ்டிஸ் தலைவர்கள் வேலை செய்யத் தயங்குவார்களானால் அவர்கள் அடைந்த தோல்வியை மீண்டும் உயிர்ப்பிக்கவே வாய்ஞானம் படித்தார்களென்ற அபவாதத்திற்கிடமுண்டாகும். நியாயமான கட்சியென்பதை நிலைநாட்ட வேண்டுமானால், தலைவர்களாவது திரிகாரண சுத்தியுடையவர்களாயிருக்க வேண்டுமென்றோ? செய்தலரிதென்றால் எளிதில் என் சொல்ல வேண்டுமென்ற கேள்விக்கிடமுண்டாகும். தலைவர்கள் முயற்சிக்கேற்ப ஜஸ்டிஸ், திராவிடன், குடியரசு முதலிய பத்திரிகைகளும் ஒத்துழைக்க வேண்டும்; சமயோசிதமான ஆலோசனையுங் கூற வேண்டும்; தென்னாட்டில் தீண்டாமை, ஆலயப் பிரவேசம் முதலிய சீர்திருத்தங்களைப்பற்றி நாம் பன்முறை எழுதி திராவிடன், குடியரசு முதலிய பத்திரிகைகளின் அபிப்பிராயங்களைத் தாராளமாக வெளியிடக்கேட்டும், இன்னும் அவைகள் மௌனஞ்சாதிக்கின்றன. ஸர். பாத்ரோ, கனம் பனகால் அரசர் முதலிய தலைவர்கள் கருத்தும் திருத்தமாய் வெளியிடப்பட்டுவிட்டதால் இனியேனும் தத்தம் கருத்துக்களைப் பொருத்தமாய்த் தெரிவிக்குமா வென்று பார்ப்போம்.

## மறு நிமிஷத்தில் சுயராஜ்யம்.

நம் பாரதநாட்டு மக்களுக்கு சுயராஜ்யம் என்னும் திருமந்திரத்தை முதலாவது உபதேசம் பண்ணியவர் நம் பாரத திலகம் தாதாபாய் நௌரோஜியவர்களே. பாலகங்காதர திலகர் காலத்தில் படித்தவருள்ளத்தில் மட்டும் அத் திருமந்திரம் அடிப்பேறிக்கொண்டிருந்தது. என்றாலும் அவ்விரு கிழவர்களும் சுயராஜ்யத்திற்கு எல்லை குறிப்பிடவே இல்லை. மகாத்மா காந்தியவர்கள் சுயராஜ்யமெனும்திருமந்திரத்தைக் கிராமாந்திரங்களுக்கே அதிகமாக உபதேசித்தார். அவருடைய சர்வ ஏடர்களுடைய கவனமும் கிராமங்களின் மேலேயே நின்றன.

இவ்வாறின்னும் நான் சொன்னபடி கேட்டு நடப்பீர்களாகில் ஒரு வருஷத்தில் சுயராஜ்யம் என்றார் மகாத்மாகாந்தி. ஒரு வருஷத்தில் சுயராஜ்யம் வந்தால் மறு நிமிஷத்தில் பிராமணாட்சி செத்துவிடுமென்று பயந்த ஓர் கூட்டத்தார் மகாத்மாகாந்தி இயக்கத்தை சாகவைக்கச் சாதகமாயிருந்தார்கள், இருக்கிறார்கள். இதனாலேமிக நெருங்கிவந்த சுயராஜ்யம் வெகு தூரத்திற்போய் மறைந்து விட்டது.

இப்போது தேச மகாசபைத் தலைவர் மகானுபாவர் ஸ்ரீயான் ஸ்ரீநிவாசய்யங்கார் சுயராஜ்யத் திருமந்திரத்தை வெகு சுலபமாய்ச் சொல்லிவிட்டார். சென்னையிலிருந்து அஸ்ஸாமிற்குச் சென்றார்; அஸ்ஸாமிலிருந்து சென்னைக்கு வந்தார்; சென்னையிலிருந்து டில்லிக்குப் போனார். டில்லியிலிருந்து சென்னைக்கு வந்தார். திலகர் கட்டடத்தில் கூட்டம் கூட்டினார். இனிச் செய்யவேண்டியதென்னவென்றுயோசித்தார். காங்கிரஸ் நன்கு நடைபெற்று முடிந்தால் நமக்கு மறு நிமிஷத்தில் சுயராஜ்யம் வருமென்றுரைத்தார். கைதட்டிக் கரகோஷமாய் விட்டது. வந்துவிட்டது சுயராஜ்யம்.

கவர்ன்மெண்ட் சம்மந்தப்பட்ட எல்லாப் பட்டம் பதவிகளை விட்டொழித்தலும், கதர் கட்டலும் நூல் நூற்பதும், மது விலக்குவதும், தீண்டாமை தீர்ப்பதுமே காங்கிரஸ் வேலை என்றும் இவையெல்லாம் சரிவர நடந்தால் ஒரு வருஷத்தில் சுயராஜ்யம் என்று சொன்னார் மகாத்மாகாந்தி. இவைகளில் எதற்காவது லாயக்குள்ளவராக இப்போதேனும் இருக்கிறாரா ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்கார். மறு நிமிஷத்தில் சுயராஜ்யம் வருமென்பதற்கு என்ன ஆதாரமிருக்கிறது? சட்ட சபைகளால் ஒரு பிரயோசனமுமில்லை யென்று முதலில் தெளிவாய்ச் சொல்லிவிட்டு சட்ட சபையைவிட்டு விலகாமலிருந்துகொண்டே நான் சாகு முன்னர் தேசத்திற்கேதேனும் கூடுமான கிஞ்சித்து சேவைசெய்ய நீங்கள் மறுபடி உதவ்புரிய வேண்டுமென்று மறுபடியும் உங்களை நான் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன், என்றால் இதன் அர்த்தமென்ன? தேசத்திற்குச் சாதகமானதீண்டாமைவிலக்கு, மது விலக்கு, கதர் முதலிய திட்டங்களை நிறைவேற்ற முன்வர மாட்டேன்; தாஸ் திட்டமான கிராம நிர்மான வேலைக்கும் போக மாட்டேன்; சட்ட சபை மட்டமானாலும் திட்டமாய்விட மாட்டேன்; நீங்களெல்லோரும் என் வாயையே பார்த்துக்கொண்டே எனக்குதவி செய்துகொண்டேயிருக்கவேண்டுமென்பதா? பிரிட்டிஷ் ஆட்சியும் பிராமணாட்சியும் நிரந்தரமாய் என்றும் நின்று நிலவவேண்டுமென்று கேட்டுக்கொள்வதா? வாசகர்களே கவனித்துக்கொள்ளட்டும்.

நாமிதுகாறும் சட்டசபையிலிருந்த அனுபோகத்தினால் காங்கிரசைப் பார்க்கிலும் சட்ட சபை பெரிதல்லவென்று சொல்லியவர் சென்னைச் சட்ட சபையில் இரட்டையாட்சிக்கு பாதபூஜை செய்து கொண்டிருக்கும் தமதுசகாக்களைப் பற்றி ஒரு வார்த்தையாவது சொல்லவில்லை, கள்ளையும், கதரையும், தீண்டாமையையும் பற்றிப் பேசவேயில்லை சட்டசபை மட்டந்தான் ஆயினும் அதில்நான் ஒட்டிக்கொண்டேயிருக்கிறேன். நீங்கள் எனக்குதவியாகவே யிருங்களென்று பொருள்படப்பேசி விட்டார். சுயராஜ்யக் கட்சியின் வேஷம் வர வர வெளிவருவதைக் கண்டேனும் தேச மக்கள் தெளிவடைவார்களாக.

## குறிப்புகள்.

### நமது லாட்டரி.

நமது நாடார்குல மித்திரன் க்ஷேமநிதி லாட்டரிப்பிரைஸ் எடுக்கும் தினம் இன்னும் பதினைந்துநாட்களானிருக்கின்றன. லாட்டரி மொத்தச் சீட்டுகள் 33000 க்கு 22 சீட்டுகளுள்ள 1500 புஸ்தகங்கள் தான் பூர்த்தியாகவேண்டும். தற்போது மித்திரனை ஆதரித்துவரும் அன்பர்கள் தவறாமல் தலைக்கொரு புத்தகம் பூர்த்திசெய்தனுப்பினாலும் வெற்றிபெற்றுவிடக்கூடும். இதை நாம் பன்முறையுங் கூறியிருக்கிறோம். இந்நோக்கங்கொண்டே சந்தா நேயர்கட்குத் தவறாமல் புஸ்தகமனுப்பி பல கடிதங்களுமெழுதியிருக்கின்றோம். அநேகர் உதவி செய்வதாகப்பதில் எழுதியிருக்கிறார்களென்றாலும் இன்னும் அநேகர் பதில் எழுதக்கூடவில்லையாயினும் ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற உதவி செய்வார்களென்றே நம்புகின்றோம்.

வட ஜில்லாக்களில் யாம் செய்த பிரயாணத்தின் போது தக்க உதவி செய்வதாக வாக்களித்த பிரகாரம் அவர்களெல்லாம் உதவி செய்து வருகிறார்கள். மற்றுஞ் சில்லாக்களின் பலவிடங்களுக்கும் நமது அண்ணாமலைநாடாரவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்துவருகிறார்கள். அநேக கனவான்கள் தக்க ஆதரவு கொடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் நமது சந்தா நேயர்களும் மிகுந்த குலாபிமானிகளும் நல்ல முயற்சிசெய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய அதிதீவிர முயற்சியானது நமது க்ஷேமநிதியை வெற்றியுடன் நிறைவேறச் செய்யுமென்று சந்தோசத்துடன் குறிப்பிடுகிறோம்.

பர்மாவிலும் நம்முடைய மித்திரனை யாதரிக்கும் குலாபிமானிகளும் கனவான்களும் உதவி செய்வதாக ஆரம்பத்திலேயே அநேகர் எழுதியிருந்தார்கள். அதன்படி பலர் புஸ்தகங்கள் விற்று பணமும் அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் நாம் மதிப்பிட்டபடி பூரண ஆதரவுக்கு இன்னும் சரியான தகவல் கிடைக்கவில்லை. இரங்கூன் ஸ்ரீமான்கள் ஐவ. முத்துக் குமாருநாடார். பொன்னுச்சாமிநாடார் பு. கு. அ. ஆறுமுகநாடார் முதலியவர்களிடமிருந்து தேறுதலான பதி

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

லொன்றும் கிடைக்காமையால்தான் சிறிது தயங்குகிறோம்; என்றாலும் மித்திரன் மீது பூரண அபிமானமுண்டென்பதையும் வாரப்பதிப்பாக்கு வதற்குரிய பேருபகாரமளித்தவர்களென்பதையும் நாமொருபோதும் மறக்க மாட்டோம். இவ்விஷயத்திலும் அவர்களுடைய பூரணமான ஆதரவு கிடைக்குமென்றே மிகவும் நம்பியிருக்கின்றோம்.

பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளில் திருப்திகரமான ஆதரவிருக்கிறது. அடுத்த வாரத்தில் முழுத் தொகையும் சேர்ந்து விடுமென்பதற்கு அறிகுறி தெரிக்கவிடும். எப்படியும் குறித்தகாலத்தில் பிரைஸ் எடுப்பதாகவே துரிதமாக வேலை நடந்து வருகிறது. ஆகையால் புஸ்தகங்களை எல்லோரும் உடனே பூர்த்திசெய்தனுப்புவார்களென்று எதிர்பார்த்திருக்கிறோம்.

## பெண்கள் நாயகத்திற்கு பொன் பரிசு.

தூத்துக்குடி ஸ்ரீமான் அரி. அ. சுப்பையநாடார் அவர்கள் அருமைப்புத்திரியும் சிவகாசி ஸ்ரீமான் எஸ். நடராஜநாடார் பி, ஏ. பி, எல். ஹைகோர்ட்டு வக்கீல் அவர்கள் மனைவியுமாகிய ஸ்ரீமதி புஷ்பம்மாள் அவர்கள் சென்னை லேடி வில்லிங்டன் காலேஜில் சென்ற வருடம் ஸ்கூல் பைனல் பரீக்ஷையில் முதன்மையாகத் தேறியதற்காக சென்னை மாஜி கவர்னர் லார்டு பெண்ட்லண்ட் அவர்களாலும் ஸர், பி. எஸ். சிவசாமி ஐயர் அவர்களாலும் கொடுக்கப்பெற்ற இரண்டு தங்கமெடல்களை நாளது 7—4—27-ல் அவ்வம்மையார் வாங்கியிருக்கிறார்களென்பதை மிக்க சந்தோசத்துடன் தெரியப்படுத்துகிறோம்.

இந்த நாடார்குலப் பெண்கள் நாயகம் ஒரு பரீட்சையில் முதன்மையாகத் தேறி மாகாணத்தலைமை அதிபதியவர்களாலும் இந்திய அரசியல் மன்றத் தோரங்கத்தவராலும் பொன்பரிசு பெற்றிருப்பது இதுவே முதற்றடவையென்பது குறிப்பிடத்தக்கது.

நாடார்குலப் பெண்மக்களில் கல்வி அபிவிருத்தியிற் சிரத்தையுடையவர்களுக்கு இச்சம்பவம் மிகுந்த உற்சாகத்தைக் கொடுக்கக்கூடும் என்றே நம்புகிறோம்.

பொதுவாக சிவகாசியில் நாடார் பெண்கள் கல்வி அபிவிருத்தியில் அதிகக் கவனம் செலுத்திவருகிறார்களென்றும் அதற்கேற்ப பெண்கள் கல்வித் துறையிலும் சைவ சன்மார்க்கத்திலும் மிகுந்த விருத்தியடைந்து வருகிறார்களென்றும் பன்முறை கேள்விப்பட்டோம். நாமொரு முறை பெண்கள் கலாசாலையைப் பார்வையிட்டபோதும் மாணவிகளுக்கு, கல்வி கற்பதிலும் புலால் மறுத்தலிலும் சைவ சன்மார்க்க நெறியிலும் உள்ள ஊக்கமும் பற்றும் நன்கு விளங்கக் கண்டோம்.

பிரஸ்தாப ஸ்ரீமதி புஷ்பம்மாள் ஜெனனமும் சிவகாசியாதலால் சிவகாசி பெண்மக்களுக்கும் மிகுந்த பெருமையைக் கொடுக்குமென்பதைக் குறிப்பிடாமலிருக்க முடியாது. பெண்கள் கல்வி எவ்வளவு விருத்தியடைகிறதோ அவ்வளவு சமூக முன்னேற்றமும் உண்டாகக் கூடுமென்பதை நாடார்குல நண்பர்கள் மனதிற்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

## மந்திரியார் விஜயம்.

சென்னைமாகாண அபிவிருத்தி மந்திரியாய ஸ்ரீமான் ஏ. இரங்கநாதமுதலியாரவர்கள் நெசவுத்தொழில் ஸ்தலமாய அருப்புக்கோட்டைக்கு பங்குனிமீ 28௳ ஸ்ரீமான்கள் ஊ. பு. அ. சௌந்திரபாண்டியநாடார், டில். கே. துளசிராம் ஆகியவர்களுடன் திடீரென விஜயஞ்செய்து பருத்தி கண்ட்ரோல, விவசாயம், கைத்தறி விஷயமாய் நேரில் பார்வையிட்டு ஜனங்களின் அபிப்பிராயங்களைக் கேட்டறிந்தனர். மு. மு வாசகசாலை சார்பாக பிரமுகர்களை யானை மேளவாத்தியத்துடன் வரவேற்று உபசரித்தனர். நாடார் ஹைஸ்கூலிலும், தேவாங்கர் குல முன்னேற்றசபையிலும் ஸ்ரீ சாலி மாரிஷி கோத்திர அபிவிருத்தி சங்கத்திலும் உபசாரங்கள் நடைபெற்றன. பின் அன்று தினமே சகாக்களுடன் விருதுநகர் புக்கினர்.

## நாடார் மகாநாடு.

நல்ல சமயம்!

நல்ல தருணம்!!

உத்தம குலப் புண்ணிய சீலர்காள்! நமது நாட்டிற்கோர் திலகமாக விளங்கி வருகின்ற மகாத்மா நமது சென்னை ராஜதானிக்கு விஜயம் செய்து ஒவ்வொரு ஜில்லாக்களுக்கும் சென்று நமது நாட்டின் விடுதலைக் கருவியாகிய கதரை அபிவிர்த்தி செய்ய ஆவல் கொண்டிருக்கிறார்கள். இத்தருவாயில் நாடார் மகாஜன சங்க மகாநாட்டை திருநெல்வேலியில் கூட்டி வைத்து நமது நடபடிகளை அன்னவர் முன்னிலையில் நிதர்சனப்படுத்தி அதனால் வரும் இதம் பெறுவது சாலவும் நன்று.

'காற்றுள்ள போதே
தூற்றிக் கொள்' என்றபடி

இதுசமயம் தவறினால் மறுசமயம் வாய்ப்பதரிது. நமது க்ஷத்திரிய குல உத்தமர்காள் நன்றென்பதை இன்றே செய்ய முன் வாருங்கள்.

நமது நாடார் மகாஜன சங்கம் தற்சமயம் எவ்வளவு குறைபாடுகளை நிவர்த்தி செய்து நமது குலத்தினருக்கெல்லாம் எத்தகைய நல்ல விஷயங்களைப் போதித்துவருகிறதென்பதைத் தெரிவித்துக் கொள்வதற்கு இது ஒரு நல்ல சமயம் வாய்த்திருக்கிறது. இப்படி இருப்பதின் விஷயங்களை நாடார் மகாஜன சங்க உத்தியோகஸ்தர்கள் ஒரு பொதுக் கூட்டம் கூடி சகல தீர்மானங்களையும் பேசி முடிவு செய்து கூடிய சீக்கிரம் மகாநாடு கூடுவதற்கான பிரயாசைத் திட்டங்களை நமது குல மித்திரனில் வெளியிடுவார்களா என்று நாடார் குல கனவான்கள் மனகுதூகலத்துடனிருக்கிறார்கள்.

ம. பெ. ஷண்முக நாடார்,
இரங்கூன்.

## இந்திய சட்டசபை.

அடுத்துக் கூடும் இந்திய சட்டசபையில், தாழ்த்தப்பட்ட மக்களின் நன்மையைக் கவனிக்க ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு அதிகாரியை உடனே நியமிக்க வேண்டுமென்றும், உத்தியோகஸ்தரும், உத்தியோகப் பற்றற்றவர்களுமடங்கிய கமிட்டி யொன்று நியமித்து தாழ்த்தப்பட்ட மக்களின் ஸ்திதியை அறிந்து அவற்றை நீக்கும் வழிகளைத் தேட யோசனை கூற ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், தபால் கார்டு விலையை காலணாவாக மாற்ற வேண்டுமென்றும் ஆக மூன்று தீர்மானங்களை கனம் எம். வி. ராஜா பிரேரிக்க விருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## இலங்கை வர்த்தமானம்.

(மனோகரன் எழுதுகிறார்)

### "மித்திரன்" க்ஷேம நிதி.

"மித்திரன்" க்ஷேம நிதிக்கு அன்பர்கள் பலரும் ஆதரவு கொடுத்தே வருகிறார்கள். நமது விசேஷ நிருபர் கேட்டுக் கொண்டபடி கனம் அதிபர் அவர்கள் விட்டுப்போன வேலை துரிதமாய் வெற்றியுடன் நடைபெற்று வருகிறது. எவ்வழியிலும் ரூ 5000 குறையாமல் இலங்கையிலிருந்து வருமாகும் என்று உறுதியுடன் நம்பலாம். "மித்திரன்" ஆக்கத்திற்குக் காரணரான இலங்கை நாடார் பெருமக்கள் இக்கைங்கர்யத்திலீடுபடுவது ஆச்சரியமல்ல. தங்கள் நாட்டார் தளரா முயற்சி எடுக்க வேண்டியது அவசியம்.

### தொழிலாளர் துயரம் தீர்ந்தது.

கொழும்பு டவுனில் துறைமுகத் தொழிலாளர் போதிய சம்பளம் கொடுபடவில்லையென்ற காரணம் பற்றி வேலைநிறுத்தம் செய்து சத்தியாக்கிரக விரதம் பூண்டனர். இலங்கைக் காங்கிரஸ் தலைவர்கள் தொழிலாளர் துயரம் தீர்க்கவும், பசிப்பிணி யகற்றவும், குழப்பம் ஏற்படாமல் ஜனங்களைக் காப்பாற்றவும் தக்க கவலை எடுத்துக் கொண்டனர். உண்மை வெற்றி கொண்டது. சத்தியாக்கிரகம் ஜெயித்தது. தொழிலாளர்கள் தலைவர்களுடன் வெற்றிக் கொண்டாட்ட வைபவத்தை 9—4—27 ல் மிக்க சிறப்பாய் நடத்தினர். தொழிலாளர் தலைவர் ஸ்ரீமான் குணசிங்கம் தளரா முயற்சி போற்றத்தக்கது. அன்னவர் உருவப் படம் ஊர்வலத்தின்போது சுமார் 2000 சொற்ப விலைக்கு விற்பனை செய்யப்பட்டது. அதில் ஜனங்களின் அன்பு பெரிதும் விளங்கியது.

* *

### இலங்கை நாடார் மகாநாடு.

இதன் விஷயமாய் சென்ற மித்திரனிலும் குறிப்பிட்டிருக்கிறேன். "இலங்கை இந்திய க்ஷத்திரிய நாடார் சங்கத்தார்" இலங்கையில் மகாநாடு கூட்டும் விஷயமாய் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட வேண்டும் என்று பலர் விரும்புகின்றனர். டை சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் டி. ஜி. மணி நாடார் அவர்கள் இதைக் கவனிப்பார்களா? தனிப்பட்ட முறையில் நண்பர் எஸ். ஏசுதாஸ் நாடார் பவரின் அபிப்பிராயங்களை அறிந்து வருவது சிலாகிக்கத்தக்கது. அன்னவர் முயற்சி போற்றத்தக்கது. இலங்கை இந்திய க்ஷத்திரிய நாடார் சங்க நிர்வாகிகள் தங்கள் அபிப்பிராயங்களை 'மித்திரன்' மூலம் வெளியிடுவார்களா?

## ஹிந்து மகாசபைக் கூட்டம்.

### பிராமணர்களின் நிலை கண்டிக்கப்பட்டது.

### மத அபிவிருத்தியில் சகல ஹிந்துக்களும் ஒன்றுபட வேண்டும்.

9—4—27-ல் கங்கை நதிக் கரையில் (ஹரித்துவார்) ஹிந்து மகாசபை பண்டித தேவரத்ன அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. தமது பிரசங்கத்தில், ஹிந்து மதத்தில் தற்போதுள்ள குறைபாடுகள் பல உண்டென்றும், முக்கியமாய் பிராமணர்கள் தங்கள் நிலைமாறி சரியானபடியா யில்லாதிருக்கின்றனரென்றும், ஆகையால் ஹிந்து சமூகம் கெட்டுவிட்டதென்பதில் சந்தேகமில்லையென்றும், இனி புத்துயிர் பெற வேண்டுமாயின் ஹிந்து மத நூல்களையும், கலைகளையும், அபிவிருத்தி செய்வதிலும், பண்படுத்துவதிலும், அனைத்து ஹிந்துக்களும் ஒன்றுபட்டுழைக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள்.

### ஸநாதன தர்ம மகாநாடு.

இதன் ஐந்தாவது கூட்டம் மஹந்த ஹரிதாம் தாஸின் தலைமையில் கூடியது. பாதைகளில் விக்கிரகங்களை வைத்து பூஜிப்பது கூடாதென்றும், விதவா விவாகத்தைக் கண்டிப்பதாகவும், புண்ணிய ஸ்தலங்களில் அனாதைக் குழந்தைகளுக்கும், விதவைகளுக்கும விடுதிச் சாலைகள் ஏற்படுத்த வேண்டுமென்றும் டை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## தூத்துக்குடித் துறைமுகத் திட்டம்.

தூத்துக்குடித் துறைமுக வேலை அருகுறையாய் இருப்பதைப் பூர்த்தி செய்வதென்ற நோக்கம் எம்மட்டில் ஆதரவு பெற்றுள்ளதென்று விசாரித்தறியும் பொருட்டு கனம் சென்னை கவர்ன்மெண்டு சட்ட மெம்பர் ஸர். ஸி. பி. இராமசாமி அய்யர் அவர்கள் 7—4—27-ல் தூத்துக்குடிக்கு விஜயஞ்செய்து துறைமுக வேலை நடந்து கொண்டிருப்பதைப் பார்வையிட்டனர். அவ்வமயம் ஐரோப்பிய வர்த்தக சபையார் ரூ 57 லக்ஷத்திற்கு மேற் போகாமல் துறைமுக வேலையைப் பூர்த்தி செய்வதில் தங்களுக்குள்ள சம்மதத்தைத் தெரிவித்தனர். இந்திய வர்த்தக சபை வருடக் கூட்டத்தில் அக்கிராசனம் வகித்து துறைமுகத் திட்டத்தைப் பூர்த்தி செய்வதுதான் உசிதமாகுமென்றும், இடையில் நழுவ விட்டால் இதுவரை செலவான 19 லக்ஷமும் வியர்த்தமாகு மென்றும், இந்த ரூபாயைக் கவர்ன்மெண்டுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடன் நம்மேல் விழுந்து விடுமென்றும் பேசினார்.

வியாபாரிகள் சார்பாகவும், இந்திய வர்த்தகசபை சார்பாகவும், கிலச்சுவான்தார் சார்பாகவும், தோணிக் காரர்கள் சார்பாகவும் கண்டு கொண்டதில் கண்டிப்பாய்த் துறைமுகத் திட்டத்தை மேற்கொண்டு நடத்திச் செல்வதால் கடைசியில் கட்டணம் அதிகமாய்த்தான் கட்ட வேண்டிவரும் அதைத் தாங்க முடியா தென்றும், இதுவரை செலவான 19 லக்ஷத்தையும் பல்லைக் கடித்துக்கொண்டேனும் அதிகக் கட்டணம் ஏற்படுத்தி, கொடுத்து விடலாமென்றும் முறையிட்டனர். மானாமதுரை—மணியாச்சி ரயில்வே திட்டம் சீக்கிரம் கவனிக்கப்படுமென்று ஒருவர் கேள்விக்கு பதில் சொல்லப்பட்டது.

தர்மத்தையும், அதிஷ்டத்தையும்
கோரிச் செய்வதில் உற்சாகங்
கொள்வோம்.

பிரைஸ் எடுக்கும் நாள்
நெருங்கிவிட்டது!

மித்திரன் க்ஷேமநிதி லாட்டரி புஸ்தகம்
பெற்றதை விற்றிருக்கிறீர்களா?
இல்லையானால்
அவசியம் விற்பனை செய்யுங்கள்
அதிஷ்டம் முன்னிற்கிறது.

குறிப்பிட்ட தேதியில்
திட்டமாய்ப் பிரைஸ் எடுக்கக்கூடும்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# தருமம்.

(நவமணி எழுதுவது)

தர்மமென்பதற்கு ஈகை அல்லது கொடை என்பது பொருளாகும். அசாவது மற்றவர்களின் மிடிமையைப் பார்த்து அநுதாபப்பட்டு தங்களுடைய உதவியை ஈடு கொடுத்தலே யொழிய வேறல்ல. இவ்வாறு ஈடு கொடுத்தலுக்கு இரக்கம், அன்பு, பொறுமை ஆகிய இம்முக்குணங்களும் காண்டல்வேண்டும். இம்முக்குணங்களே ஓர்வன் மனதில் தர்மசிந்தனையை உண்டாகப்பண்ணுகின்றன. இத்தர்மசிந்தனை ஏற்படுதலே நாம் தருமம் செய்வதற்குக் காரணம். தர்மஞ் செய்வதை நமது கடமைகளிலொன்றாகக் கொள்ளவேண்டும். மானிடப் பிறப்பெய்திய நமக்கு ஈகை அல்லது தர்மம் என்ற மேம்பட்ட விதி இல்லையேல் யாதொரு பிரயோஜனமுமில்லை. தர்மசிந்தை நமதிருதயத்தில் மிளிரவேண்டுமாயின் மேற்சொன்ன முக்குணங்களும் அமையல் வேண்டும். இம்மூவகைக்குணங்களும் மனுஜென்மத்தை நல்வழி செல்லவுங்கருவிகளாக விருக்கின்றன. இவை ஓர் மனிதனில் உற்பத்தியாகாவிடின் தர்மசிந்தனை அவனிடம் கிஞ்சித்தேனும் உண்டாகா. இத்தகைய குணங்களில்லா தவரைப்பற்றி ஔவை மாதா 'ஏசியிடவின் இடாமை பேசன்று' என்று பகர்ந்திருக்கிறாள். யாசகரைத்தூற்றி ஈவார்களேயாகில் அவர்களுடைய எதிர்கால வாழ்க்கையிக்க அநுதாபமுள்ளதாயிருக்குமென்பதே. தவிரவும் அவ்வம்மை தாம் இயற்றிய ஆத்தியசூடியின் முதல் வரியாக "அறஞ்செயவிரும்பு" என்று பகர்ந்திருப்பது மிகவும் கவனிக்கத்தக்கது. அவனவன் இஷ்டப்படி தர்மம் செய்ய ஆசைப்படவேண்டுமே யொழிய கீர்த்தி அல்லது புகழை விரும்பி தர்மமிடக்கூடாது. பூமியிலுள்ள ஆறுகளும், மேகங்களும், விருக்ஷங்களும் உலகத்தின் பதிலை எதிர்பார்த்து உபகாரஞ்செய்கிறதில்லை. பெரியோர்களும் பதிலுபகாரத்தை நாடாமல் தருமஞ் செய்வார்களென்று இதிலிருந்து தெள்ளிதின் அறியக்கிடக்கின்றது. நாம் செய்யுந்தருமங்கள் பலனற்றுப்போகமாட்டா. அவை ஒன்று கோடியாக விருத்தியாகுமே யொழிய ஒன்றும் குறைவுபடா. ஐயமிட்டுக்கெட்டவரில்லை. அதிகங்கொடுத்து தரித்திரமடைந்தவரில்லை. நாம் பூலோகத்தில் அவதரித்த போழ்து ஒன்றையும் கொண்டுவந்ததுமில்லை; கொண்டுபோவதுமில்லை. இடையிலுள்ள சொற்பகாலத்துக்குள்ளே ஈசனருளாற்கிடைத்த கொஞ்சப்பொருள்களுடன் ஈண்டு, உருண்டு, புரண்டு கூத்தாடுகிறோம். மேல் மூச்சு வாங்கினபின்போ, எல்லாம்மாயையாகத் தோன்றுகின்றன. ஆகையால் நமக்கின்ற சொற்ப நாட்களை தர்மமென்ற முறையில் செலவழிக்கப் பிரயாசைப்படவேண்டும்.

பிறக்கும்பொழுது கொண்டுவந்ததில்லைப் பிறந்துமண்மே
லிறக்கும்பொழுது கொடுபோவதில்லை யிடைநடுவிற்
குறிக்குமிச் செல்வஞ்சிவன்றந்ததென்று கொடுக்கறியா
திருக்குங்குலாமருக்கென் சொல்லுவேன் கச்சியே கம்பனே

என்றார் பட்டினத்துப் பிள்ளையார்.

ஒருவனுக்கு வறுமை நேரிடினும் உயர்ந்த பதவியை யளிக்கும் தர்மத்தைக் கைவிடக்கூடாது. நாம் எவ்வளவதிகமாக ஈந்திடினும் நம்முடைய ஐசுவரியமான்து குறைவுபடமாட்டாது. பெரிய தோர்யானைக்குக் கொடுக்கும் கவளத்தில் சிறியதோர் பாகம் விழுமின் அதைத்தின்று ஒரு கோடி எறும்புகள் உய்யும். ஆனால் அக்களிறுக்கோ குறைந்ததாகத் தெரியா. அஃதேபோல் நாம் அறஞ்செய்ய விரும்புவோமாயின் நமது செய்கை நமக்கு மிகச் சொற்பமாகவும், அற்பமாகவும், அதைப் பெற்றுக்கொள்ளும் யாசகர்க்கோ பிரமாண்டமாகவுந்தோன்றும். மேலும் [illegible] யாசகர் பரல் யாதொரு இரக்க[illegible]

பார்த்துவிட்டு சகிக்கமுடியாமல் கூச்சலை நீக்கும்பொருட்டே யாசகமளிக்கிறார்கள். தர்மஞ்செய்வதை இரக்கத்தோடுகூடிய திருப்தியுடன் செய்யவேண்டுமே யொழிய எளியோர் புகழும்படி தர்மமிடக்கூடாது. தர்மஞ்செய்வதற்கு கருவியாகவுவளது இரக்கம். ஈசன் எவ்வாறு இரக்கத்தை வெளிப்படுத்தினரென்பது பின்வருங்கதையினின்று தெளிவாகின்றது. திருஞான சம்பந்தர் சுமார் மூன்று பிராயத்தில் தன் தந்தை சிவபாதவிருதயருடன் பொய்கைக்கேக ஆங்கு சிவபாதவிருதயர் சம்பந்தரை கரையில் நிறுத்திவிட்டு தாம்மூழ்கி ஸ்நானம் செய்ய, உடனே சம்பந்தர் பிதாவைக்காணுமலோலமிட, அவ்வழுகைக்குரலைச் செவியுற்ற சிவபிரான் இரக்கப்பட்டு உமாதேவியிடத்தில் தனது முலைப்பாலை பொன்வட்டிலிலே கறந்து இவனுக்கு ஊட்டு என்றியம்ப அம்பிகையும் அப்படியே செய்தாள். இத்தகைய இரக்கம் காணப்பட்டாலன்றோ தர்ம வளர்ச்சி தழைத்தோங்கும்.

தர்மஞ்செய்கிறது பிரதி நன்மையைக் கருதிச்செய்யக்கூடாது. பூமியினது உதவியை நாடாமலே மழையானது பொழிகிறதுபோல் நாமும் மற்றவர்களது உதவியை நாடாமல் பிறரும் நம்மைப்போல் தழைத்திருக்க வேண்டுமென்று செய்வது எவ்வளவு மேன்மையைத் தரத்தக்கது!

அரசனுடையகடமை குடிகளைப் பரிபாலித்தலாதலால் அவனிடத்தில் இரக்கமிருக்கவேண்டும். அப்படிக் குடிகள்மீது இரக்கம்பாராட்டாமல் ஈகைக்குணம் காணப்படாத ராஜனுடைய நாட்டிலே வருஷ மும்மாரிபொழியுமென்றும், குடிகளிடத்தில் இரக்கம் பாராட்டி தர்மஞ்செய்கின்ற ராஜனுடைய நாட்டிலே மாத மும்மாரி பொழியுமென்றும் ஆன்றோர் கூற்று.

'அறத்தினூஉங்காக்கமுமில்லை
மறத்தலினூங்கில்லை கேடு' (குறள்)

ஒருவன் எவ்வளவோ ஈந்திடினும் அவனது செல்வம் குறைவுபடாதென்றும், தர்மத்தை மறந்துவிடின் பெரியகேடு விளையுமென்றும் திருவள்ளுவநாயனார் மேற்கண்டபாவில் நவின்றிருக்கிறார். கலவெண்பா பாடிய புகழேந்திப் புலவரும் யாசகர்க்கீவோரைத் தடுப்போர்கள் மகாபாவியென்கிறார்.

"ஆற்றுந் துணையால் அறஞ்செய்கை முன்னினிதே" என்றார் இனிது நாற்பது இயற்றிய பெரியார். இதில் இயன்றமட்டும் தர்மஞ்செய்தல் மிகவும் இனிதென்று கூறப்பட்டிருக்கிறது. மிகுதியான செல்வமுண்டாகும்போது தர்மஞ்செய்யலே உத்தமமானதென்றும், தர்மத்தின்பொருட்டு பொதுஜனங்களின் நன்மையை நாடி வரிகளையும் சோலைகளையும் அமைக்க வேண்டுமென்று அவர் வரைகின்றார். தர்மத்தையே அணிகலமாகப் பூண்டோர் யாதொருதடையுமின்றி சிவபாதத்தை யடையலாமென்று திருவள்ளுவநாயனார் சொல்லியிருக்கிறார். ஆகவே ஒருவன் தர்மஞ்செய்வதிலேயே கண்ணுங்கருத்துமாயிருப்பானேயாகில் யாதொருவிதமான கெட்ட அபிப்பிராயமும் மனக்கவலையு மேற்படா. ஒருவன் தரித்திரனாயினும்செய்கின்ற தர்மத்தைத் தனது கடமை என்று கருதி நிறைவேற்றுவானாகில் அவனுடைய வாழ்நாள் நீடிப்பதற்கு இது ஓர் ஏதுகரமாகும். சிலர் மிகுதியான பொருட்களைச் சேகரித்து இனஜனங்களுக்கீயாமலும், தர்மஞ்செய்யாமலும் ஆழமாகத்தோண்டிப் புதைத்து விட்டுக் காலகதியடைகின்றனர். அப்பொருட்களை அவர்களும் அனுபவியாமல் பிறருக்கும் உதவாமல் இறப்பதைவிட பரிதாபமான தொன்றுமில்லை. ஆகா, பணத்தின் வன்மைதான் என்னே! "ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்" என்றார் ஔவைப் பிராட்டியார். மேற்கூறிய தர்மம் இரண்டுவகைப்படும். வெளியரங்கமாகச் செய்யும் தர்மமும் அந்தரங்கமான தர்மமென்ன வெனில் தங்களை கௌரவப்படுத்தும் பொருட்டு மிக்கபொருட் செலவழித்து கோயில்களும் சத்திரஞ்சாவடிகளும் கட்டுவித்து தங்கள் பெயரை நிலைநாட்டுகிறதேயாம். யாவரும் அறியும்படி செய்யுந்தர்மம் உத்தமமானவையல்ல. ஒருவரும் அறியாமல் ஈசனுக்கும் தர்மஞ்செய்வோருக்கும் மாத்திரம் தெரிந்து செய்யுந்தர்மமே மேம்பட்டதென்னலாம். இதைப்பற்றி இயேசு பெருமானும் "உன்வலக்கை செய்கிற தர்மத்தை உன் இடக்கை அறியாமலிருப்பதாக" "வெளியரங்கமாயல்ல பகவானுக்கும் உனக்கும் மட்டும் தெரியும்படியாக அந்தரங்கமாகத்தர்மமிடு" என்ற தமது திருவாயால் கூறியுள்ளார். அன்பானது தர்மஞ்செய்வதற்கு குருவானகையால் பவுல் முனிவனும் அன்பைப்பற்றி வருணனை செய்யும்போது ஒருவனுக்கு தன் பிராவிடில் சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவுமிருக்கிறானென்று போதிக்கிறார். ஆகவே தருமஞ்செய்யும்போது நாம் மிகவும் அந்தரங்கமாகச் செய்ய வேண்டும். மேலும் இரண்டு கண்களும் சேர்ந்து ஒருபொருளைப் பார்ப்பதுபோல புருஷனும் மனைவியும் சேர்ந்து தர்மமிடல் நன்று.

"நாவினுனியில்லை நயமிருக்கிற்பூமாது
நாவினிய நல்லோரு நண்ணுவாள்
ஆங்கடினமாகில் அதிருவுஞ்சோர் முன்
ஆங்கே வருமரணமாம்"

என்ற ஆன்றோர் கூற்றுப்படி கடினமான பதங்களை உச்சரிக்கிற பெண்களிடத்தில் லட்சுமி வதியாளென்றும் மூதேவி யவளிடத்தில் சேர்வாளென்றும் அத்தகையோர் ஆயுசு நாள் நீடிக்காதென்றும் அறியக்கிடக்கின்றது. தர்மவழியிற் செல்வோர் கொடும் பசங்களை உபயோகித்தலும் பொருளில்லாதவர்களின் கொடையும் இடுக்கண் விளைவிப்பதாகும்.

"அறமனத்தார்கூறுங் கடுமொழியு மின்னு
இடும்பையுடையார் கொடையினு — இன்னுநாம்பது

நமக்குண்டானதில் திருப்தியோடு என்னென்ன ஈகிறோமோ அவைகள் அவ்யாசகர்க்குபஞ்சாமிர்தத்தைப் பெற்றுப்போலாகும்.

ஒப்பொடு முகமலர்ந்தே யுபசரித் துண்மை பேசி
உப்பில்லாக்கூழிட்டாலும் உண்பதே யமிர்தமாகும்.
முப்பழமொடுபாலன்னம் முகங்கடுத் திடுவராயிற்
கப்பியபசியொடுகடும் பசியாகுந்தானே.

என விவேகசிந்தாமணியார் நவின்றபடி பெண்கள் எப்போதும் முகமலர்ச்சியுடன் தர்மஞ்செய்ய வேண்டுமென்பது தெளிவாகின்றது. இந்தியா தர்மத்திற்குப் பேர்பெற்ற தேசம்.

பூர்வீகத்தில் அரசு எய்தின நம் இந்தியதேயத்து மன்னர்களைப் பார்ப்போமானால் அவர்கள் மிகவும் தர்மசிந்தனையுள்ளவர்களாயிருந்திருக்கிறார்கள். நளச்சக்கரவர்த்தி தன் தேசத்தைமீண்டும் புஷ்கரராஜனிடத்திலிருந்துபெற்று அரசாண்டதிற்குக் காரணம் அவன் செய்த தர்மத்தின் பலனேயாம். நளன் மேகத்தைப்பார்க்கிலும் எழுபத்ததிகமாக கொடுக்குங்கையையுடையவனாகையால் அவனது தேசத்தில் மழையானது அவனது கொடையைப்போல் நீரைச்சொரிந்ததாம். நளச்சக்கரவர்த்தி தர்மத்திற்கு வேலியானவன் என்று சொல்லவும் வேண்டுமோ! இச்சற்குணமுடைய சக்கரவர்த்தி தானுண்ணு முன் யாசகர்க்கீந்துவிட்டு அதன் பின்னர் தன் சிற்றுண்டிகளைப் புசிப்பார். அவனது குலகளும் தருமகைங்கரியத்தை கைக்கொண்டு வந்தானென்பது நைடதம் நகரப்படலத்தினின்று நன்கு புலப்படும். நாம் பூமியை எவ்வளவோ வெட்டியிடித்திடினும் அது நம்மை இடைவிடாமல் சுமந்து கொண்டேயிருக்கிறது. அத்தன்மையேபோல் நளச்சக்கரவர்த்தியும் பூமியைப்போல் தர்மத்திற்கு ஆதாரவாயுள்ள பொறுமையுடையவனாயிருந்தான்.

'எடுத்திடில் விசயனம்பு யேகமாயெடுத்து வொன்றாக
தொடுத்திடிற் பத்துமாகி விடுக்கிலத் தொண்ணூறாகு
மடுத்ததைவிட்டவாறே யாயிரமாகி [illegible]
றடுத்திடுங்கோடிபோல மறைவல் லோர்க்கீயுந்தானம்.'

பண்டையில் நமது இந்தியதேசத்தில் அரசாண்ட பாண்டுமைந்தர்கள் செய்த தர்மத்தின் பயனாக அர்ச்சுனன் அம்பானது உறையிலிருந்து எடுக்கும்போது ஒன்றாகவும், தொடுக்கையில் பத்தாகவும், விடுக்கும்போது நூறாகவும், விடபட்டவுடனே ஆயிரமாகவும் இலக்கிலேபடும்போது கோடானகோடியாயும் சிதறிவிழும். அத்தன்மைபோல் நாம் செய்யும் தர்மம் இப்படியே அபிவிருத்தியாகுமென்பதைக் காண்க. ஆகவே தர்மம் இன்றியமையாதது. தருமத்திற்கென வாழ்நாளைச் செலவிடுவது சாலச்சிறந்தது. தருமசிந்தனை நமது வாழ்வில் பெருமை பொருந்திய தொரு செய்கையாகும்.

## "நாடார் குல மித்திரன்" லாட்டரி.

இந்த லாட்டரிக்கு ஏக காலத்தில் ரூ 33000 சேர்ந்து விடக்கூடிய ஒருசக்தியும், உபாயமும் நமக்குண்டாயிருந்துமானால் அதனை இவ்விஷயமாய் பூரண விருப்பத்துடன் பிரயோகஞ்செய்ய ஏற்கனவே நாம் முன்வந்திருக்கலாகும் என்ற போதிலும் நாம் குடியிருக்கும் கிராமத்துக்கு மூன்று புத்தகங்கள் அனுப்பப்பட்டிருந்தது. அம் மூன்று புத்தகங்களாவது பூராய் விற்கப்படலாமென்று எதிர்பார்த்தோம். அக்கிராமத்திலோ புத்தகங்கள் விற்பனையாகவில்லை. இதர கிராமங்களில் சில சீட்டுகளை விற்பனை செய்து வரலாமென்று போனாலோ கோலாகா ஸ்திரீகளில் கிருஷ்ண பிரசன்னமில்லாத ஓர் வீட்டை நாடார் தேடியவாறாகவே முடிகிறது. ஆகவே இத்தென பகுதியில் கிராமந்தோறும் ஏராளமான லாட்டரி புஸ்தகங்கள் விற்பனை செய்யப்படாமல் குவிந்து கிடக்கின்றன என்றே சொல்லப்பெறும் நிலைமையிலிருக்கிறது. இதன் காரணமென்ன? நமது ஜனங்களின் அபிமானக் குறைவா? தரித்திரமா? அறிவீனமா? எனச் சில கேள்விகள் ஏற்படலாம். ஜனங்கள் ரூ 1 கொடுக்கக் கூடாத அவ்வளவு தரித்திரர்களல்ல நாடார் குல சம்பந்தமாக எவ்வித சக்கிளர்ச்சியிலும் அபிமானமற்றவர்களுமல்ல. தென் திசையில் ஒரே ஒரு குறைவுதான் உண்டு. சீட்டு விற்பனை செய்து பணம் வாங்குபவர்களிடம் பெரும்பாலும் ஜனங்களுக்கு நம்பிக்கை கிடையாது. இதனால் சுய மரியாதையைக் காக்க விரும்பும் பலர் தங்களைப்பற்றி மற்றவர்கள் தப்பான அபிப்பிராயம் கொள்ளாதபடி இவ்விஷயத்தில் சிரமம் எடுக்க முன் வராமல் தங்களாலியன்ற வரை சில சீட்டுகளைப் பதிவு செய்து விடுவதுடன் நின்று விடுகிறார்கள். ஆகையால் வடக்கிலிருந்து யாரேனும் ஒருவர் நேரில் கிராமந்தோறும் சுற்றித்து நேரில் சீட்டு விற்பனை செய்வதாயிருந்தால் கொளும்பில் வசூலாகக்கூடிய தொகையை விட அதிகத் தொகை இத்தென் திசையிலும் வசூலிக்கப்படக் கூடும்.

வடக்கிலுள்ளவர்களைப் பண விஷயத்தில் நம்பலாமென்பது பொதுவாக இவ்விடத்திய அபிப்பிராயம் எனப் பலர் சொல்லக் கேள்விப்படலானேன். இவ்வபிப்பிராயத்திற்கிணங்க நமது மித்திரன் பிரதிநிதி சுற்றுப்பிரயாணத்துக்குத் தயாராயிருப்பதாய்த் தெரியவருகிறது. இந்தப் பிரயாணத்தில் நமது நாடார்கள் கொளும்பில் நமது அதிபரை எவ்வளவு தூரம் திருப்தி செய்ய முன் வந்தனரோ அவ்வண்ணமே திருநெல்வேலியிலும் அன்னாரது சார்பாக நம்மைச் சந்திக்கவிருக்கும் ஸ்ரீமான் அண்ணாமலை நாடாரவர்களை எல்லாவித கௌரவத்துடன் வரவேற்று அன்னாரின் பிரயாண நோக்கம் சித்தி பெறுமாறு நம்மவர்கள் ஏற்கனவே தங்களை ஆயத்தம் செய்து கொள்ள வேண்டுமென்று இதனை ஓர் முன் ஜாக்கிரதையாக நமது குல முன்னேற்றத்தின் பேரால் நம்மவர்களை அன்பாய் வேண்டிக்கொள்ளுகிறோம்.

டி. பாலசுந்தர நாடார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## புதிய ஸ்டாக்!
## விலை வெகுசகாயம்!!
## உடனே ஆர்டர் செய்யுங்கள்.

பாக்கட் வாச்.

| | ரூ. அ. |
|---|---|
| ரெயில்வே டைம்கீப்பர் | 3—0 |
| ரெயில்வே ரெகுலேட்டர் | 3—8 |
| ராஸ்கோப் ஸிலிண்டர் | 3—8 |
| நிக்கல் லீவர் 10 ஜியூல்ஸ் | 8—8 |
| ஷை 7 ஜியூல்ஸ் | 7—8 |
| 8 days நிக்கல் | 9—8 |
| **ரிஸ்ட்வாச்.** | |
| நிக்கல் ஸிலிண்டர் ,, | 5—8 |
| வெள்ளி ஷை ,, | 6—8 |
| ரோல்ட்கோல்ட் ,, | 6—4 |
| நிக்கல் லீவர்வில்க் பட்டையுடன் | 12-8 |
| வெள்ளி ஷை | 15—8 |
| ரோல்ட் கோல்ட் ரிஸ்ட் | 15—0 |
| 18 காரட் கோல்ட் ,, | 25—0 |
| B. டைம்பீஸ் | 2—0 |
| பிராட்வெஸ்ட் டைம்பீஸ் | 3—12 |
| Westend co's. B. டைம்பீஸ் | 2—12 |
| அலகோனியா B. டைம்பீஸ் | 5—0 |
| ஷை அலாரம் ,, | 4—8 |
| பிக்பென் அலாரம் ,, | 9—8 |
| பேபிபென் ,, | 10—0 |
| R. G. ரிஸ்ட்செயின் | 3—8 |
| R. G. பக்கல் Silkstrap | 2—8 |
| R. G பாக்கெட் செயின் | 6—8 |
| **பவுண்டன் பேனாக்கள்.** | |
| வாட்டர் மென் | 7—0 |
| ஸ்வான் | 5—8 |
| ஹார்ட்வேர் | 2—8 |
| பிளாக்பர்டு | 3—0 |
| ஓ மேக்கர் | 5—8 |
| லைட்டிங் பாக்கட் லாம்ப் | 1—4 |
| ஷை பெரிய லென்ஸ் | 1—8 |
| ஹாண்ட்லாம்ப் பெரிய லென்ஸ் | 1—8 |
| டார்ச் லாம்ப் பெரிய லென்ஸ் | 8—0 |

ராமநாத் & கோ,
தபாற் பெட்டி நெ 1248, சென்னை.

## தாய்மார்கள்
## கவனிக்க வேண்டியது.

சில தாய்மார்களுக்கு பலவித காரணங்களால் பால் சுருங்கி சிசுக்கள் தவிப்பதை நிவர்த்தி செய்து பால் வளரும்படி செய்ய நம்மால் ஒரு தேக்காய் ஜெபித்து வி. பி. செய்யப்பட்டு வருகிறது. 20 வருடத்து அனுபவம்; எம்மதஸ்தரும் வாங்கலாம். அனுப விக்கும் விதம் தேங்காயுடன் அனுப்பி வைக்கப்படும். இதன் விலை தபாற் செலவின்றி ரூ 1—4—0 மாத்திரம்.

குறிப்பு:— காத்துக்கருப்பு விஷயத்திற்கும், தேக சம்மந்தப்பட்ட வியாதிகளுக்கும், மந்திரத்தாலும் மருந்தாலும் சிகிச்சை செய்யப்படும்.

விலாசம்:—

எ. எஸ். எ. மாந்தரீக டாக்டர்,
இனும்தார் வீடு,
சின்னக்கடைத்தெரு, தெப்பக்குளம்,
திருச்சி.

## உடனே தேவை.

தமிழ்ஜில்லாக்களிலும் கொழும்பு, பினங்கு, சிங்கப்பூர் பர்மா, இரங்கூன்முதலிய வெளி தேசங்களிலும் நமக்கு ஏஜெண்டுகள் தேவை. ஜெயமில்லாவிடில் பணம் வாபீஸ் என்ற கண்டிஷன் பேரில் நாம் விற்பனை செய்கிறோம். மற்ற விவரங்களுக்கு ஒரு அணா ஸ்டாம்பு வைத்து எழுதவும்:—

ஆர். சேஷன், எடிட்டர்,
ஸ்ரீரங்கம், (திருச்சி.)

பார்க்கப் புதுமை! படிப்பதற் கினிமை!!

பவளப்பதுமை என்னும்

# மலையாளத்து மர்மம்.

நாவலிற் சிறந்த நாகரீக நாவல்
நாட்டிற் குகந்த நவீனக நாவல்
அற்புதக் கற்பித அதிசய நாவல்
சித்திரப் படங்கொண்ட செந்தமிழ் நாவல்
மானிடர்க்கேற்ற மனோகர நாவல்
புத்திபோதிக்கும் புதிய நாவல்

250 பக்கம். நான்கு சித்திரப்படங்கள்.
புத்தகம் 1-க்குவிலைரூ 1—4—0. உடனேஎழுதுங்கள்.

விலாசம்:— மானேஜர்,
ரஞ்சித மனோகர புஸ்தகசாலை,
53. செட்டித்தெரு கொழும்பு.

சென்னை, சி. க. சங்கரலிங்க நாடார் எழுதிய
சிறந்த செந்தமிழ் நாவல்.

வீரெங்கம், வீரோதம், வீச்டம், அற்புதம் நிறைந்து
படிக்கப் படிக்க வியப்பைத் தரும் காவல்.

## அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றிருக்கிறோம்.

# ஜோதிடம்.

ஒரு வருஷபலன்! ரூபாய் ஒன்றுதான்.

உங்களுடைய எதிர்காலபலனை அறிந்துகொள்ள விரும்புகின்றீர்களா? அப்படியானால்உங்களுடையஜெனனநட்சத்திரம்அல்லது பெயரை எழுதி அனுப்பினால் தற்சமயம் நடக்கும் 12 மாத பலன்கள் அதாவது:—உத்தியோகம், வியாபாரம், புத்திர சந்தானம், யோகம், விவாகப் பொருத்தம் முதலிய பலாபலன்களை எழுதி அனுப்பப்படும்.

சிற்றின்ப சாஸ்திரம் என்னும் புத்தகம் 1-க்கு விலை அணா 8. எமது விலாசம்:—

"ஜோதிடசாலை"
(கா) என்னூர் போஸ்டு, செங்கல்பட்டு ஜில்லா.

## தேவை.

நமது நாடார்மகாஜன சங்கத்திற்கு 3 பிரசாரகர்கள் தேவை. பிரசங்கம் செய்வதில் திறமையுள்ளவராய் இருக்கவேண்டும். ஆங்கிலப் பயிற்சியுமிருந்தால் மிகவும் நல்லது. விபரத்திற்கு காரியதரிசிகள், "நாடார்மகாஜன சங்கம்", 221. கீழமாரட் வீதி, மதுரை என்ற விலாசத்திற் கெழுதவும்.

# அவைஎங்கேகிடைக்கும்?

அருப்புக்கோட்டை "நாடார்குல மித்திரன்" பத்திராதிபர் ஸ்ரீமான் கு. ஆ. முத்துநாடாரவர்கள் இயற்றிய

தென்னாட்டுப்புலி
**ஜெம்புலிங்கம் ஜீவிய சரித்திரம். (1)**

ஐரோப்பா யுத்தத்தில் அரும்பாடுபட்ட
**ஆவரியா நாடார் ஜீவிய சரித்திரம்.**
(சித்திரப் படங்களுடன் கூடியது.) (2)

திருமலையப்பபுரம் ஸ்ரீமான் பா. பி. இரத்தினபாண்டியர் இயற்றிய
**சௌந்தரகாந்தி நாவல். (3)**

சென்னை நாடகாசிரியர் ஸ்ரீமான் ச. க. சங்கரலிங்க நாடாரவர்கள் இயற்றிய
**நாடார் மகாஜன சங்க வாரக்கீர்த்தனை. (4)**

ஆகியவைகள் கீழ்க்கண்ட விலாசத்தில் கிடைக்கும். வாங்கிப்பயன் பெறுங்கள்.

"இரத்தின விலாஸ்",
28 நிர். 1-வது குறுக்குத்தெரு,
கொழும்பு.

# B. Abdul Karim Sahib,

## Kareemiya Unani Medical Store,
## Cuddalore, O. T., (South India)

அருமை துரைகளே! பொறுமையாய்க் கவனியுங்கள்!!

இழந்துபோன பலத்தையும், கலத்தையும், நரம்புத்திடத்தையும், அதிஅற்புத ஆச்சரியமான இன்பசுகசக்தியையும் இது உபயோகித்த ஒரே வேளையில் தெரிந்து கொள்ளலாம். ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிக் கடிதங்களும், தங்க மெடலும் பரிசுபெற்ற

ஜவாஹீர் முபற்ரு என்னும்

## மதன மோஹன ஊர்க்குருவி
## கிருத லேகியம்.

அசல் பாகம்! அருமையானது!!

பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதமுள்ளது. இந்தப் பாகம் சரியாக வேறு எந்த கம்பெனியார்களும் செய்து காட்டும்பட்சத்தில் அவர்களுக்கு எங்கள் கம்பெனியால் ரூ 500 இனும் கொடுக்கப்படும்.

அன்பின் மிக்குள நண்ப சிகாமணிகளே!

அருமையும், அனுபவமும், பெருமையும், பிரபல்யமும், மஹா அற்புத ஆச்சரிய வல்லமை சக்திகளும் வாய்ந்த இந்த அசல் "முபற்ரு" லேகியத்தை உபயோகிக்கும் உத்தமர்கள் மணவாழ்க்கையிலே தாம் என்றுங் கண்டிராத சித்தானந்த கெம்பீர சிற்சுகவின்ப நலங்களையும், சில அற்புத குணங்களையும் தெரிந்துகொள்வார்கள். ஆஹா! குணத்தால் சிறந்த இந்திரலோஹத்திய "காமசஞ்சீவினி" இதுதானோ! என்றும் பன்முறையும் புகழ்வார்கள். ஆணாய்ப்பிறந்து இவ்வுலகத்தில் வளர்ந்து இளம் பால்யப் பருவத்திலேயே தின்னூர் மோசக்கன்னியிற் பட்டுக்கெட்டும், இன்னும் பலவிதக் காரணங்களினாலும் தேஹத்திற்குச் சத்காரணமாகிய நாதவிந்தை வீண் விரயஞ் செய்தும், கல்ல வாலிபப் பருவத்தில் வீரிய விர்த்திகுறைந்து உலவன்பசக்தியை இழந்து ஆண் தன்மையற்ற வயோதிகர் போல் மயங்கி நிற்கும் புருஷர்களும், வாத பித்த சிலேற்பன மிகுதிக் குறைவாலும் எலும்புருக்கி வெட்டைச் சூட்டினாலும் ஜீவரத்தின பீடமாகிய சுக்கிலம் ஜலம்போல் நீர்த்து தரிதஸ்கலிதமுடையோரும், சித்திரபங்கமென்னும் சொர்ப்பனஸ்கலிதத்தால்நாளும்வாதனைப்பட்டுக்கொண்டிருப்பவர்களும்சுரம், பிரமேகம், விஷப்பாண்டு முதலிய வியாதிகளால் இரத்தம் குறைந்து நாதம் இளகி சர்வ நரம்புகளும் தளர்ந்து ஐம்புலன்களின் உற்சாகமுங் குறைந்து, வியாபக சக்தி குறைவு, கைகாலசதி, தேக காங்கை, இடுப்புவலி, பசிமந்தம், மலச் சிக்கல் முதலிய வியாதிகளால் சதா வருந்துவோரும்,

மனோதத்வ புத்தி சாதுர்யத்தைக் கொண்டு வேலை செய்யக்கூடிய லாயர்கள், குமஸ்தாக்கள், பாடலீகர்களும் மற்றும் வியாபக சக்தியால் வேலையையுடைய எந்தத் தொழிலாளர்களுமே இதனை உபயோகித்தால் நல்ல உற்சாகமும், சந்தோஷமும் அடைவார்கள். திடமான தேஹக் கட்டெப்பாட்டையும் வியாபகவிர்த்தி புதியமேனியையும் இரத்த விர்த்தி, வீரிய விர்த்தி, சந்தானவிர்த்திமுதலிய சர்வ நலங்களையும் பெறுவார்கள். சிக்கிரஸ் கலிதமுடையவர்களுக்கு இது ஓர் இணையில்லாத பரம சஞ்சீவியேயாகும்; குணம் செய்வதில் இது மஹாவல்லமையும், பெரும் பிரகீர்த்தியும் பெற்றது. இதனை பரீக்ஷிக்கும் ஒவ்வொரு நண்பர்களுக்கும் தப்பாமல் குணம் செய்யும் சத்தியமான சித்தானந்தயோக பாகம் இதுதான் என்றும் நாம் சொல்ல வேண்டியதில்லை. பலனும் கலனும் சில அற்புத ஆச்சரிய வல்லமெய்குணங்களும் ஒரே வேளையில் தெரியும். கண்டாலே தெரியும் காக்ஷி! தின்றாலே தெரியும் திடன்!! இத்தகைய குணங்கள் இதில் இல்லையென்றும் சத்தியமாகச் சொல்லுகிறவர்களுக்கு எமது கம்பெனியிலிருந்து ரூபாய் 100 இனும் கொடுக்கப்படும். தன்னை பலப்படுத்திக்கொள்ள நாடும் பிரகவான்கள் கட்டாயம் ஓர் முறை பரீக்ஷை செய்யவும். உபயோக விபரம் கூடவே வரும். ஆர்டர் செய்யும் கனவான்கள் இந்த பேப்பரின் பெயரைக் குறித்து எழுதவும்.

40-நாள் மருந்து 16-பலம் டப்பி 1-க்கு விலை ரூ 10-0—0
20-நாள் மருந்து 8-பலம் டப்பி 1-க்கு விலை ரூ 5—0—0
10-நாள் மருந்து 4-பலம் டப்பி 1-க்கு விலை ரூ 3—0—0

பாக்கிங் & V. P. செலவு பிரத்தியேகம்.

**B. அப்துல் கரீம் சாயபு,**
கரீமியா யூனானி மெடிகல் ஸ்டோர்,
கூடலூர், O. T.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection




# "எம்பயர் பாம்."

எல்லா நோய்களுக்கும் தேவாமிர்தம்.

The house hold remedy for all ailments is our "Empire, Balm"

ஏஜெண்டுகள் தேவை.

புட்டி 1-க்கு ரூபாய் 0-8-0

டசன் 1-க்கு ரூ 5-0-0

விபரத்திற்கு:- எம்பயர்பாம் மனுபாக்சரிங் கம்பெனியென்ற விலாசத்திற்கு எழுதித்தெரியவும்

கீழமாரட்டு வீதி, மதுரை

---

# HAKEEM. K. MOHAMED YOOSOOF

MUHAMMEDIA MEDICAL HALL

PORTO-NOVO, S. A. Dt[India.]

ஓ நண்பர்காள்!

நமது வைத்தியசாலைக்குநேரில் வந்து பணத்தைப்பற்றி கவனிக்கவேண்டாம் தாதுபுஷ்டிக்காக முதல் தரமானலேகியம். வேணுமென்று கேட்கும் தனவான்களுக்குமட்டும் இதை தனியாகச்செய்து கொடுத்து வந்தோம். இப்போது எல்லா ஜனங்களும் இதன் சுகத்தை அடையும்படி இப்பத்திரிகை மூலமாய் வெளிப்படுத்தி யிருக்கிறோம்.

உலகத்தில் வெளிவந்திருக்கும் லேகியங்களுக் கெல்லாம் மகுடம்

## இராஜ தத்துவ லேகியம்.

இழந்து போனபலத்துக்கும் தளர்ந்து போன நரம்புகளுக்கும் ஒரே வேளை யிலேகியம் சாப்பிட்டபிறகு அதிக உற்சாகத்துடன் பலத்தை கொடுப்பதில் இதற்கு சமமாய் எதைக்காட்ட முடியும்?

இந்தலேகியம சாப்பிடுகிறவர்கள் இதற்கு சமமானலேகியம்காட்டுவார்களானாலும் சரி அல்லது இதில் சொல்லப்பட்ட குணங்கள் இதில் அவ்வனவாக இல்லையென்று ரூபிப்பார்களானாலும் சரி அவர்களின் பணம் திரும்பக்கொடுத்து விடப்படும்.

உத்தரவாதமுள்ள சத்திய ஔஷதம்.

வீரிய தத்துவத்தையும் நாடி நரம்பு தாதுகளின் உர்சாகத்தையும் கொடுத்து தேக காங்கையினால் நீர்றுப்போகும் தாரிதஸ்கலிதத்தையும் சொற்பனஸ்கலிதத்தையும் 2 வேளை மருந்தில் குணப்படுத்தும். மூளையைபலப்படுத்தி ஞாபகசக்தியைத் தரும். பற்பலவாய்வுரோகம், இடுப்புவலி, கைகால்சந்து, பசிமந்தம், மலச்சிக்கல் இவைகளை சுகப்படுத்த வதில் முதல் தரமான மருந்தென்று தங்களின் சிநேகிதர் பால் புகழ்ந்து பேசுவீர்கள் பத்தியமில்லை.

ஒருராத்தல் கொண்ட டப்பி 1-க்கு விலை 10-0-0

அரைராத்தல் கொண்ட டப்பி 1-க்கு விலை ரூபா 5-0-0

கால்ராத்தல் கொண்ட டப்பி 1-க்கு விலை ரூபா 2-12-0

வி. பி. செலவு வேறு.

நமக்கு நேரில் ஆர்டர் செய்தால் மட்டில் இந்தலேகியம் கிடைக்கும். மற்றவரிடம் கிடைக்காது.

விலாசம்:—

ஹகீம், கா. முஹம்மதுயூசுபு,

முஹம்மதியா வைத்தியசாலை,

பரங்கிப்பேட்டை, தென்னார்க்காடு ஜில்லா

---

உங்கள் வீட்டில் எந்த சமயங்களிலும் சேவிக்கு இனிமையான பல சங்கீதப் பாட்டுக் கச்சேரி இனி நடைபெறும்.

100 ரூபாய் பெறும்படியான பெரிய கிராமபோன் (Gramaphone) போலவே பாடக் கூடிய அளவில் செய்யப்பட்ட

## மினியேச்சர் கிராமபோன்.

ஜெர்மன் தேசத்தில் ஓர் தொழிற்சாலையில் மாத்திரம் தயாரிக்கப்பட்டது. லண்டன் நகர் வர்த்தகர்களுக்கும், குடும்பஸ்தர்க்கும் ஆயிரக் கணக்காய் செலவிடப்பட்டது. தற்சமயம் எங்களால் ஜெர்மன் தொழிற்சாலையிலிருந்தே தருவிக்கப்பட்டது. பாட்டுகளை சப்திக்கும் இயந்திரங்களுடன் பார்வைக்கு அழகாயும், பற்பல அதிசயங்களுடனும் பாட்டுகள் பாடக் கூடியது. சயிஸ் 6"-6"; பிளேட் 5½;" உயரம் 4" உள்ள கிராமபோன் பெட்டி 1-ம், பல தினுசு பாடும் டபிள் சயிட் ரிகார்டு 1-ம், ஊசிகள் பாக்கட் 1-ம்,



செட் 1-க்கு விலை ரூ 8-8-0. தனி டபிள் சயிட் ரிகார்டு (தட்டு) 1-க்கு ரூ 1. ஊசிகள் பாக்கட் 1-க்கு அணு 4. தபால் சார்ஜ பிரத்தியேகம். வி பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்ப வேண்டும். பாக்கிங் போஸ்டேஜ் ரூ 1-6-0.

விலாசம்:—

ஓவர்சீஸ் சுவிஸ் வாட்சு கம்பெனி,

மவுண்ட் ரோடு, மதராஸ்.

---

ஏமாந்துவிடாதீர்கள்! உடனே எழுதுங்கள்!!

உங்கள் நன்மையைக் கோரிவுதயமான

# இரங்கூன் இரகசியம்.

(ஓர் இனிய தமிழ் நாவல்.)

200-பக்கங்கள்; அழகான ராப்பர் பைண்டு செய்தது.

விலை ரூபாய் 1-0-0. வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்.

பால்யநாடார் சங்கப்பாட்டு.

நாடார்குல மக்களின் நலத்தைக்கோரி தற்கால நவீனமுறையில் எழுதியது. 70 பக்கங்கள், இரண்டு ஆப்டோன்படங்கள் உள்ளன. விலை அணு 0-8-0. சொற்பப்பிரதிகளே கைவசம். ஆர்டருக்கு முந்துங்கள்.

| | |
|---|---|
| கொளும்பு ஏஜென்ஸி:— | விலாசம்:— |
| ரஞ்சிதமனோகர புத்தகசாலை, | பஞ்ச சக்தி புத்தகசாலை, |
| 53. செட்டி தெரு, | 63 நிர். 29-வது வீதி. ரயில்வே பிளாக், |
| கொழும்பு. | தபால் பெட்டி நிர் T 1051., இரங்கூன். |

---

## எலிமெண்டரி பாட ரத்தினங்கள்.

ஹிவிக்ஸ், நேச்சர் ஸ்டடி ஸயன்ஸ் அடங்கியது. எல்லாப் பாடசாலைகளுக்கும் உபாத்திமாருக்கும் மிகவும் அவசியம். 3-ம் பதிப்பு விலை அணு 14. இது ஆசிரியரிடமும், சென்னைவேப்பேரி, எஸ். பி. ஸி. கே. டிப்போவிலும் கிடைக்கும்.

ஜேம் வக்கபிளரி.

இங்கிலீஷ் தமிழ் முதல் புஸ்தகம் 6 அணு; 2-ம் புஸ்தகம் 8 அணு. 6 மாதத்தில் இங்கிலீஷ் பேச எழுத லேசாய்க்கற்க எல்லாருக்கும் மெத்த அவசியம். ஒரு நேர்த்தியான லெட்டர் ரைட்டரும் அடங்கும். இது ஆசிரியர் நாகபட்டணம் மிஷின் ஹைஸ்கூல் ஆசிரியர எஸ். வி. கோயில்பிள்ளையிடமும் ஆரணி மிஷன் பிரஸிலும், ஷை சென்னை எஸ். பி. ஸி. கே. டிப்போவிலும் கிடைக்கும். உபாத்திமாருக்கும் வியாபாரிகளுக்கும் 12 ஜதைக்குமேல் விசேஷித்த கமிஷன்.

---

எங்கும் கியாதி பெற்ற

## இரணியல் ஜரிகை வஸ்திரங்கள்.

சகல ஜாதியாருக்கும், மொத்தமாக வியாபாரிகளுக்கும் அவரவர் விருப்பத்திற்கிணங்கும்படி. புடவை, கவணி, ஸாரி பலமாதிரி புளியிலை கரை நேரியல், ஜரிகைச் சேலை, விளிம்பு ஜரிகை திப்பட்டாக்கள், வேஷ்டிகள், கட்டி தினுசுகள், அநேக விதமான துண்டுகள், பட்டுத் துப்பட்டாக்கள் முதலிய எவ்வித வஸ்திரங்களும் உயர்வான தரமாக ஆர்டர் கிடைத்த 10 தினங்களுக்குள் வி. பி மூலமாக அனுப்பப்படும். கூடுதல் விபரம் வேண்டியவர்கள் மானேஜர் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

இ. வ. நீலகண்ட பிள்ளை,

மானேஜிங் புரோப்ரைட்டர்,

"இரணியல் கிளாத் ஸ்டோர்"

இரணியல், நெய்யூர் போஸ்டு, தென் திருவிதாங்கூர்.

---

## திருச்சியில் நாடார் ஹோட்டல்.

திருச்சினாப்பள்ளி கோட்டை, சின்னசவுக்கில் "நாடார் லாட்ஜ்" என்ற பெயருடன் கைதேர்ந்த பாகஸ்தர்களைக் கொண்டு ஒரு புதிய ஹோட்டல் ஏற்படுத்தி அறுசுவையுடன் அமுதளித்து வருகிறோம். தனியாகவும் குடும்ப சகிதமாகவும் தங்கிப் போவதற்கு தக்கவசதியும், ஸ்நானஞ்செய்வதற்கு மிக்க சௌகரியமும் செய்திருக்கிறோம். உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள், வியாபாரிகள் முதலிய யாபேருக்கும் அவரவர் சௌகரியப்படி செய்து திருப்தியளிக்கத் தயாராயிருக்கிறோம் சாமான் முதலியன பந்தோபஸ்து செய்யவும் இடங் கொடுக்கப்படும். வந்து ஆத்ம திருப்தி செய்துஎம்மை ஆசீர் வதிக்கக் கேட்டுக்கொள்கிறோம்.

விலாசம்:—வே. பொன்னையாநாடார்,

புரோப்ரைட்டர் "நாடார்லாட்ஜ்"

சின்ன சவுக்கு, தெப்பக்குளம் (போஸ்ட்)

திருச்சினாப்பள்ளி கோட்டை.

---

## "1000 தொழில் முறைகள்."

சலவைசோப், இங்கி, மெழுகுவர்த்தி. இரசவியமை, சர்பத்து, செயற்கை தங்கம், கண்ணாடியை ஒட்டும் செலுலாயிட், பெப்பர்மெண்டு, ரசம் பூசுதல், தங்கமிலிட், சிகரெட்டு, நிக்குசசி, ரோமசம்ஹாரி, அத்தர், பற்பொடி, நரைமயிர்களுக்குத் தைலம், வீரியவிர்த்தி மாத்திரை, தேள் விஷ சஞ்சீவி, அஞ்சனம் முதலிய 1000 அபூர்வ செய்முறைகள் அடங்கிய பெரிய புத்தகம் ரூ 4-0-0. வி. பி. வேறு. தனி விபரப் புத்தகம் இனாம்! ஏமாந்துபோகவேண்டாம். ஷை பெரிய புத்தகத்தின் முக்கிய முறைகளடங்கிய "200 தொழில் முறைகள்" என்னும் புத்தகம் 210 பக்கங்கள் உள்ளது ரூ 1-0-0 தான். சிலர் இந்தமாதிரி போலிமுறைகளை ரூ 1½ 2 என்று விற்பனை செய்பார்த்து ஏமாந்துபோக வேண்டாம். எமது இந்த தொழில் புத்தகங்களின் கேட்லாக் இனாம்!


ஆர்ட்புக்ஸ் கம்பெனி, 13. திருச்சினாப்பள்ளி.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

Printed and Published By S. A. Muthu Nadar at the Sri Muthumariamman Press, Aruppukotta.

உ

கடவுள் துணை.



# ஓர் விண்ணப்பம்.

நீடாழி யுலகத்தில் வாடாப்புகழ்படைத்த நாடார் மகாஜனங்களுக்குச் செய்து கொள்ளும் ஓர் விண்ணப்பமாவதென்னவென்றால்:—

நமது நாடார் மகாஜன சங்கத்திற்கும், நாடார் சமூகத்திற்கும் நாடார்குல மித்திரன் எட்டு வருஷங்களாகச் செய்துவந்திருக்கும் அரிய சேவை எம்மட்டென்பதை ஈண்டு விரிக்கிற் பெருகும். நாடார் மகாஜன சங்கம் காரியதரிசிகளிலொருவர் ஸ்ரீமான் பா. ம. பாண்டிய நாடார் அவர்கள் அது விஷயமாய் எழுதிய வேண்டுகோளில் சுருக்கி விளக்கியிருப்பதை யாவரும் நன்கு கவனித்திருக்கலாம்.

"குலாபிமானத்துடன் அவர் சொந்த வர்த்தக முயற்சிக்கிடையில் இவ்வரிய காரியத்தை சமூக ஊழியமாகச் சலியா உழைப்புடன் நடத்திவந்திருக்கிறார், வருகிறார், வருவார்" என்று அவர் குறிப்பிட்டிருக்கிறபடி நான் எப்போதும் நடத்திவரத் தயங்குவதில்லை. இன்னும் மேலான வழியில் மித்திரனை நடத்தவேண்டுமென்றே எண்ணி வருகிறேன்.

தற்கால உலகில் பத்திரிகை படிப்பதில் விசேஷ நன்மையிருக்கிற தென்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்களாகையால் நாடார் சமூகத்தில் நாடார் குலமித்திரன் விசேஷமாய்ப் பரவிவந்தால் வெகு நன்மை ஏற்படக்கூடுமென்ற முழு நம்பிக்கையுடன் என்ன நேர்ந்தாலும் இடைவிடாமல் நடத்தி வந்திருக்கிறேன். எம் வாழ்நாட்களில் மட்டுமல்ல எக்காலத்திலும் இப்பத்திரிகை நின்றுலாவ வோர் பண்டு வேண்டுமென்றே ஒரு லாட்டரி ஆரம்பித்து நாடார்குல மித்திரனுக்கு யாவருடைய உதவியையும் நாடி இவ்விண்ணப்பம் செய்து கொள்கிறேன். ஆகவே லாட்டரிப் பிரைஸ் எடுக்கவேண்டிய நாள் மிக நெருங்கிவிட்டபடியால் அதிவிரைவுடன் அனைவரும் அதிகமான சீட்டுகள் பெற்றும் விற்றும் ஒத்தாசை செய்யும்படி மீண்டும் நமஸ்கரித்துக் கேட்டுக்கொள்கிறேன்.

தங்களன்புள்ள,

அருப்புக்கோட்டை,
18—4—27.

சூ. ஆ. முத்து நாடன்,
பத்திராதிபர்,
"நாடார் குல மித்திரன்"

நாடார் பிரஸ், மதுரை—27.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection